# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 79 — 1973 සැප්තැම්බර් 28 වැනි සිකුරාදා — 1973.09.28

79 ஆம் இலக்கம் — 1973 ம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 28 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (II அ) — விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் ... ... ... | 1001 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் ... | 1020 |


*கவனிக்க.—வருமான உச்சவரம்பும் கட்டாயச் சேமிப்பும் (திருத்தம்) சட்டமூலம் 1973 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 21 ஆந் திகதிய இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்கு குறைநிரப்பியாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.*

## பதவிகள் — வெற்றிடம்

### இலங்கைக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத் தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள்**

1 : 1 விண்ணபதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். " இலங்கையர் " என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தில் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரஜையாக இருப்பவராகும்.

1 : 2 ஏதாவது ஒரு பதவிக்கான வேட்பாளர், அப் பதவிக்கு சிரேட்ட தராதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அல்லது அதனினும் உயர்வான பரீட்சையில் சித்தியடைந்திருப்பது ஆகக் குறைந்த கல்வித் தகைமையென விதிக்கப்பட்டிருச்கு மிடத்து, சிங்கள மொழி மூலம் கல்வி பயின்ற சிங்களவராக இருப்பின் அவர் சிரேட்ட தராதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சிங்கள மொழியில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும். (1961 ஜனவரி 1 க்கு முந்திய ஒரு திகதியிலிருந்து அரச சேவையில் இருப்போருக்கும் அரச சேவையில் உள்ள பிற பதவிகளுககு நியமனத்தை நாடும் அத் தகையோருக்கும் இத் தேவை ஏற்புடைத்தாகாது.)

1 : 3 விதிக்கப்பெற்ற சிங்கள வினைத்திறமைத்திறன் தேர்வினில் சித்தி எய்தத் தவறியமைக்காக தகுதிகூர்/சோதனைக்கான நியமனங்கள் நிறுத்தி வைக்கப்பட்ட "புதிதாகச் சேர்ந்த" அரச உத்தியோகத்தர்களிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. அப்படி ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமாயின் 640 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றுநிருபத்தின் நியதிகளுக்கமைவாக விதிக்கப்பெற்ற உயர்ந்த சிங்கள வினைத்திறன் தேர்விலிருந்து விலக்களிக்கும் உரிமையை அவர்களுக்குக் கொடுக்கத்தக்க தகைமையை அவர்கள் பெற்றிருத்தல் வேண்டும்.

**2. படிகள்**

2 : 1 அரச சேவையில் உள்ள திருமணமான உத்தியோகத்தர்களுக்கு அவர்களது பதவிகளுக்கு ஏற்புடைய திரட்டிய மாத வேதனத்துடன் மேலதிகமாக தாபனக் கோவையின் vii ஆம் அத்தியாயத்தின் I ஆம் பிரிவில் தரப்பட்டபடி விவாகப் படியும் வழங்கப்படும்.

2 : 2 மாத வேதனம் பெறும் அரச உத்தியோகத்தர்கள், அவர்கள் 180 ரூபாவிலிருந்து 250 ரூபா வரையில் (சகல படிகளும் உட்பட) வேதனமாக/கூலியாகப் பெறும் தொகுதியினரைச் சேர்ந்தவராகின், அவர்களுக்கு விசேட படியாக ரூபா 7.50 கொடுக்கப்படும். அது தேவையானவிடத்து சரிசெய்யப்படுவதற்கு உள்ளாகும்.

---

**முக்கிய அறிவித்தல்**

இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் வாராந்த அறிவித்தலின் பகுதி பகுதி I: தொகுதி (II அ) விலும் (II ஆ) விலும் பிரசுரிக்கப்படும் எல்லா அறிவித்தல்களும் அவ்வறிவித்தல்கள் பிரசுரமாகும் வாரத்திற்கு முந்திய புதன்கிழமை நண்பகல் 12.00 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். குறிக்கப்பட்ட திகதிக்கும் நேரத்திற்கும் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் யாவும் எதுவித காரணத்தை முன்னிட்டும் பிரசுரத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்
கொழும்பு,
1972 ம் ஆண்டு திசெம்பர் மீ 15 ந் உ.

---

### 3. சேவை நிபந்தனைகள் : பொது

3 : 1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் விடுக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

3 : 2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம். அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

3 : 3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

### 4. நிரந்தரப் பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடைத்தாகும் சேவை நிபந்தனைகள்

4 : 1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 3 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :—

4 : 1 : 1 சகல நியமனங்களும், ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய, மூன்று வருடத்துக்குத் தகுதிகாண் நிலையிலேயே இருக்கும். தகுதிகாண் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் ஏதும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

4 : 1 : 2 அரசாங்க சேவையில் " புதிதாகச் சேர்ந்த " அரச உத்தியோகத்தர்கள் யாவரும் அரசாங்கத்தின் அரசகரும மொழிக் கொள்கையின் நோக்கத்துக்காக 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் செய் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் தற்போதுள்ள எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் அல்லது அரசாங்கத்தின் மொழிக் கொள்கைக்கு பயன் ஏற்படும் வண்ணம் இனிமேல் புகுத்தக்கூடிய சட்டங்களுக்கும் விதிகளுக்கும் அமையுமாறு வேண்டப்படுவர்.

4 : 1 : 3 சகல அரச உத்தியோகத்தர்களும், தமது தகுதிகாண் காலத்தின்போது அரசகரும மொழியில் வேலை செய்யும் அறிவைப் பெற்றுக்கொள்ளும்படி வேண்டப்படுவர்.

4 : 1 : 4 தகுதிகாண் காலம் நிறைவு எய்திய பின்பு பதவியை உறுதி செய்வது, பிறவற்றுள் நியமனம் செய்யப்பட்ட தேதியிலிருந்து முதலாவது வருடத்தினுள் முதலாந்தர சிங்கள வினைத்திறன் தேர்வில் சித்தி எய்துவதிலும் இரண்டு வருடத்தினுள் இரண்டாந்தர சிங்கள வினைத்திறன் தேர்வில் சித்தி எதுவதிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடத்தினுள் மூன்றும் தரச் சிங்கள வினைத்திறன் தேர்வில் சித்தி எய்துவதிலும் தங்கியுள்ளது. ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம், விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் சித்தி எய்தும் வரையில் அல்லது 4 : 1 : 5 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுள் ஏற்புடைத்தாகும் அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

4 : 1 : 5 தகுதிகாண் நிலைக்கால முடிவு வரையில் சிங்கள மொழியில் விதிக்கப்பெற்ற வினைத்திறனை அடையாவிட்டால் தாபனக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 12 : 13 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் பிரயோகமாகும்.

4 : 1 : 6 சிங்கள மொழி மூலம் சேர்த்துக்கொள்ளப்பட்டவர்கள் மீது 4 : 1 : 3 ஆம் 4 : 1 : 4 ஆம் 4 : 1 : 5 ஆம் பிரிவுகள் பிரயோகிக்கப்படமாட்டா.

4 : 1 : 7 அரச சேவையின், நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதி செய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகாண் நிலையில் இருக்கவேண்டியதில்லை.

4 : 1 : 8 தெரிவு செய்யப்பட்ட வேட்பாளர்கள் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்து) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அறிவதற்கு அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவ பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

### 5. நியமன நியதிகள்

5 : 1 அரச சேவையில், நிரந்தரமான பதவிகளிலாயினும் மாதச் சம்பளமுள்ள தற்காலிக பதவிகளிலாயினும் 1.1.72 க்குப் பின்பு நியமனம் பெற்ற அரச உத்தியோகத்தர்கள் (நாட் சம்பளம் கொடுக்கப்படுபவர்கள் நீங்கலாக) யாவரும் தமது திரட்டிய வேதனத்தின் 6 சத வீதத்தை அரசாங்க சேவைச் சகாய நிதியத்துக்குச் செலுத்துதல் வேண்டும். அரசாங்கம் நிதியாண்டின் இறுதியில் கொடுக்கப்படும் திரட்டு வேதனத்தின் 9 சத வீதத்தைக் கொடுத்துதவும். அத்தகைய பதவியை வகிப்பவர் (அவர் விரும்பினால்) அவரது மாதத்திரட்டு வேதனத்திலிருந்து 6 சத வீதம் வரையில் அவரது விருப்பப்படி, சேவைச் சகாய நிதியத்துக்குச் செலுத்தலாம். ஆனால் அத்தகைய உதவு தொகை மீது அரசாங்கம் எந்தவித தொகையும் செலுத்தாது.

5 : 2 1971.12.31 க்கு முன்பு அரச சேவையில் ஓய்வூதியமுள்ள நிரந்தரமான பதவிகளை வகித்த அரச உத்தியோகத்தர்கள் 1972.1.1 க்குப் பின்பு அச்சேவையில் உள்ள நிரந்தரமான பதவிகளில் நியமிக்கப்பட்டால் அவர்கள் அவர்களது ஓய்வூதிய உரிமைகளை வைத்திருப்பதற்கு அனுமதிக்கப்படுவார். அத்தகைய அரச உத்தியோகத்தர்கள் முன்பு போல விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்துக்கு பணம் செலுத்துதல் வேண்டும்.

### 6. யுத்த சேவைச் சலுகை

6 : 1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப் படைகளில் சேவையாற்றியவர்களும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப் பாதுகாப்புப் படை, ஊர் பாதுகாப்புப் படை என்பனவற்றிலும் முழு நேரக் கடமையாற்றியவர்கள், அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காது

விடின், 1939 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 3 ஆம் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையில் உள்ள அச் சேவைக் காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம், தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1946 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15 ஆம் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன், அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருந்திருத்தல் வேண்டும்.

### 7. அரச சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள்

7 : 1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்த மட்டில் விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

7 : 2 வேட்பாளர்கள், குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்படமாட்டாது.

7 : 3 ஒரு வேட்பாளரைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். வேட்பாளர் ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய வேட்பாளரைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

7 : 4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப் பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவு செய்யப்பட்ட பின்பு அப் பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

7 : 5 விளம்பரத் தேவைகளுக்கு அமைவுபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

### 8. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை

8 : 1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும்; அதில், பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.

---

*உபஅஞ்சல் அதிபர் பதவி—காலி பெரிய மருத்துவச்சாலை உபஅஞ்சல் அலுவலகம் தரம் "ஏ"—காலி மாநகரசபை*

*காலி மாநகரசபை, காலி மருத்துவச்சாலை உபஅஞ்சல் அலுவலகத்திற்கு உபஅஞ்சல் அதிபர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப்பதவிக்கு ஆகக்குறைந்த மாதாந்தப்படி 75 ரூபாவாகும்.*

*1. விண்ணப்பதாரர் இலங்கையராகவும், 1973.11.05 ந் திகதி அன்று 21 வயதுக்குக் குறையாதவராயும் 45 வயதிற்கு மேற்படாதவராயும் இருத்தல் வேண்டும்.*

*2. மாநகரசபை எல்லைக்குள் 10 வருடங்களும் அதற்குக் கூடுதலான காலமும் நிரந்தரக் குடியிருப்பாளராகவும் இருத்தல் வேண்டும். அருகாமையில் உள்ள வட்டாரத்தில் அல்லது வட்டாரங்களில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.*

*3. சிரேட்ட பாடசாலைத் தாரதரப் பரீட்சையில்/க.பொ.த. (சாதாரணம்) பரீட்சையில் சிங்களம்/தமிழ்மொழி/எண்கணிதம்/தூயகணிதம்/வர்த்தக கணிதம்/உயர்தர கணிதம்/கணக்கியல் உட்பட குறைந்தது 3 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.*

*4. உபஅஞ்சல் அலுவலகம் தற்போதைய கட்டடத்தில் நிறுவப்படும்.*

*5. காலி, கோட்டை, கோயில் வீதியில் உள்ள காலிப்பகுதி அஞ்சல் அலுவலகங்களின் கண்காணிப்பாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய ரோணியோ செய்யப்பட்ட படிவங்களில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 1973.11.05 ம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக அவரை அடையும் வண்ணம் அனுப்பப்படல் வேண்டும்.*

*மேலதிக விபரங்கள் தேவைப்படின் அவற்றை காலிப்பகுதி அஞ்சல் அலுவலகங்களின் கண்காணிப்பாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.*

*எ. ஆர். எம். ஜெயவர்த்தன,*
*அஞ்சல் அதிபதியும் தொலைத்தொடர்புப் பணிப்பாளரும்.*

9–665—28 09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 79

---

**கல்வி அமைச்சு**

*அம்பாறை ஹாடி சிரேட்ட தொழில்நுட்ப நிலைய அதிபர் பதவி*

*கல்வி அமைச்சின் கீழுள்ள அம்பாறை, ஹாடி சிரேட்ட தொழில்நுட்ப நிலைய அதிபர் பதவிக்கு* விண்ணப்பங்கள் *கோரப்படுகின்றன. கீழ்க்காணும் மாதிரி விண்ணப்பப் படிவ முறையில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு "செயலாளர், கல்வி அமைச்சு (பொது நிர்வாகக் கிளை) மலாய் வீதி, கொழும்பு 2" என்ற முகவரிக்கு 1973 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 19 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாகப், பதிவஞ்சல் மூலம் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பம் அனுப்பும் காகித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "அம்பாறை, ஹாடி சிரேட்ட தொழில் நுட்ப நிலைய அதிபர் பதவி" எனத் தெளிவாக அடையாளம் இடப்படவேண்டும்.*

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—இப்பதவி நிரந்தரமானது. தெரிவு செய்யப்படும் அபேட்சகர், அரசாங்கத்தின் கீழ் உபகாரச் சம்பள உரித்துடைய பதவி ஒன்றினை ஏலவே வகிக்காவிடின், அரசாங்க சேவை சேமலாப நிதிக்குக் கட்டணங்கள் செலுத்த வேண்டும். தெரிவு செய்யப்படும் அபேட்சகர் நியமனத் திகதியின்போது அரசாங்க சேவையில் அல்லது உள்ளூராட்சிச் சேவையில் உபகாரச் சம்பள உரித்துடைய பதவி ஒன்றினை வகிப்பவராயின் அவர் தொடர்ந்து உபகாரச் சம்பள உரித்து அந்தஸ்தை அனுபவிப்பார். தெரிவு செய்யப்படும் அபேட்சகர் ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாவிடின், முதற்கண், 3 வருட காலத்துக்குத் தகுதிகாண் முறையில் நியமிக்கப்படுவார். அரசாங்க சேவையில் நிரந்தர உபகாரச் சம்பள உரித்துடைய உத்தியோகத்தர் ஒருவர் தெரிவு செய்யப்படின் அவருடைய நியமனம் ஒரு வருட காலத்துக்குப் பதில் கடமை முறையில் அமையும்.

3. **சம்பளமும் படிகளும்.**—இப்பதவிக்குரிய திரட்டிய வருடாந்தச் சம்பளம் பின்வருமாறாகும் :—

ரூபா 14,400—480 × 3—600 × 5—ரூபா 18,840 (69.10.1 க்கு முன்னரான ஒத்த சம்பள அளவுத் திட்டம் ரூபா 11,760—3 × 480—4 × 600—ரூபா 15,600 ஆகும்).

4. **தேவைப்படும் தகைமைகள்.**—ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்பவராகத் திருப்தியான சான்று காட்டவேண்டும் :—

(அ) சிறந்த ஒழுக்கமும் உடல் நலமும் உடையவராய் இருக்க வேண்டும்.

(ஆ) 73.10.19 அன்று 35 வயதுக்குக் குறையாதவராயும் 45 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். (அரசாங்க சேவையில் ஏற்கனவே உள்ளவர்களுக்கு இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அமையாது).

(இ) (i) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்தால் எந்திரவியலில் அல்லது பொது விஞ்ஞானத்தில் வழங்கப்படும் சிறப்புப் பட்டம் அல்லது குடிசார் எந்திரவியலாளர் நிறுவனத்தின் கூட்டுறுப்பினர் தகைமை அல்லது பொறிமுறை எந்திரவியலாளர் நிறுவனத்தின் கூட்டுறுப்பினர் தகைமை போன்ற சமமான தொழில் நுட்பத் தகைமை அல்லது எந்திரவியலில் அல்லது பொது விஞ்ஞானத்தில் பட்டப் பின் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

(ii) பல்கலைக்கழக அல்லது தொழில்நுட்பக் கல்லூரி மட்டத்தில் கற்பித்தலில் 10 வருடத்திற்குக் குறையாத அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

(iii) குறைந்த பட்சம் 5 வருட நிர்வாக அல்லது நிறைவேற்று அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

(iv) சிங்களத்தில் கடமைபுரியக் கூடியவராக இருக்க வேண்டும் அல்லது நியமனத் திகதியிலிருந்து 3 வருட காலத்துக்குள் சிங்களத்தில் தேர்ச்சி பெறவேண்டும்.

**குறிப்பு.**—உயர் தொழில் அல்லது விஞ்ஞான சபைகளில் உறுப்புரிமை வகித்தல் மேலதிக தகைமையாகும்.

5. ஒவ்வோர் அபேட்சகரும் வேண்டப்படும் நேரத்தில், பின்வரும் சாதனங்களில் எதனையேனும் எல்லாவற்றையேனும் சமர்ப்பிக்க வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (**மு.கு.** ஞானஸ்நானப் பத்திரம் அல்லது உதவி நன்கொடைபெறும் பாடசாலைகளின் ஒழுங்குச் சட்டங்களின் நோக்கத்தின் பொருட்டுக் கொடுபடும் பிறப்புச் சான்றிதழ் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது).

(ஆ) பட்டப் பத்திரம் அல்லது அதியுயர்ந்த கல்வித் தராதரப் பத்திரம்.

(இ) இரு குணச்சான்றிதழ்கள். இவற்றுள் ஒன்று கல்விப் பணிப்பாளர் அல்லது கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியர் வழங்கியதாய் இருக்க வேண்டும்.

(ஈ) உயர்தொழில்/தொழில்நுட்பத் தகைமைகள் அல்லது இவ்விருவகைத் தகைமைகள் பற்றிய சான்றிதழ்.

(உ) சிங்கள, தமிழ், ஆங்கில மொழிகளில் சித்தியடைந்த அதியுயர்ந்த பரீட்சை.

**மு.கு.**— (i) சாதனங்களேனும் அவற்றின் பிரதிகளேனும் விண்ணப்பப் படிவத்துடன் இணைத்தனுப்பப்படலாகா.

(ii) வேண்டப்படும் நேரத்தில் சாதனங்களைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் சீர்தூக்கப்பட மாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தத்தம் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்பட வேண்டும். மேலே விதிக்கப்பட்டுள்ள திகதியின் பின் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. எனினும் விதிக்கப்பட்ட திகதிக்கு முன் உரிய திணைக்களத் தலைவரால் பெற்றுக் கொள்ளப்பட்டு தகுந்த காரணங்கள் காட்டி அதனை ஏற்றுக் கொள்ளுமாறு அவர் சிபார்சு செய்தால் ஏற்றுக் கொள்ளப்படும்.

7. விண்ணப்பங்களேனும் அவை தொடர்பான கடிதங்களேனும் கல்வி அமைச்சின் செயலாளருக்கே அனுப்பப்பட வேண்டுமன்றி இவ்வமைச்சிலுள்ள எவ்வுத்தியோகத்தரின் சொந்தப் பெயருக்குமல்ல.

8. இவ்வர்த்தமானியின் I ஆம் பகுதியின் (II-அ) ஆம் பிரிவின் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளவையும் அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்கு அமைபவையுமான பொது நிபந்தனைகளுக்குக் கவனம் கோரப்படுகிறது.

9. விண்ணப்பங்கள் இடைத்தமை பற்றி அறிவிக்கப்படும்.

தொடரெண் பொ. நி. 14/194,
பொது நிர்வாகக் கிளை,
கல்வி அமைச்சு,
மலாய் வீதி, கொழும்பு 2,
1973 ம் ஆண்டு செப்ரெம்பர் மீ 18 ந் வ.

செயலாளர்,
கல்வி அமைச்சு.

**மாதிரி விண்ணப்பப் படிவம்**

($8\frac{1}{2}'' \times 13\frac{1}{2}''$ அளவு அரைத்தாள்களில் தயாரிக்கப்பட வேண்டியது)

**அம்பாறை ஹாடி சிரேட்ட தொழில்நுட்ப நிலைய அதிபர் பதவி**

1. பெயர் (முதலெழுத்துக்களுடன்) : திரு./திருமதி/செல்வி : ————.
2. முழுப் பெயர் : ————.
3. உத்தியோக முகவரி : ————.
4. சொந்த முகவரி : ————.
5. (அ) இலங்கையரா ? : ————,
(ஆ) அங்ஙனமாயின், வம்சாவழி காரணமாகவா பதிவு காரணமாகவா : ————.
6. பிறந்த திகதி : வருடம் : ————. மாதம் : ————. நாள் : ————.
7. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியன்றுள்ளபடி சரியான வயது : வரு. : ————. மா. : ————. நாள் : ————.
8. தற்போதைய பதவி பற்றிய விபரங்கள் : ————.
(அ) பதவி : ————
(ஆ) நிரந்தரமா? தற்காலிகமா ? : ————.
(இ) உபகாரச் சம்பள உரித்துடையதா அற்றதா ? : ————.
(ஈ) பதவியில் உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறீரா ? : ————.
(உ) திணைக்களம் : ————.
(ஊ) நிலையம்/வேலை இடம் : ————.
(எ) திரட்டிய வருடாந்தச் சம்பள அளவுத்திட்டம் : ————.
(ஏ) திரட்டிய வருடாந்தச் சம்பள அளவுத்திட்டத்திலான தற்போதைய படி : ————.

9. கல்வித் தகைமைகள் பற்றிய விபரங்கள் (சிங்களத்தில் பெற்றுள்ள தேர்ச்சி/தமிழில் பெற்றுள்ள தராதரப் பத்திர விபரங்கள் உட்பட) :—

| பரீட்சை | வருடம் | பாடங்கள் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |

10. உயர்தொழில் தகைமைகள் பற்றிய விபரங்கள் :—

| தராதரப் பத்திரம் | வழங்கிய நிலையம் | வருடம் | பாடங்கள் |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |
| 5. | | | |

11. பொதுக் கல்வி கற்ற நிலையங்கள் : —

| நிலையம் | வகுப்பு | தொடக்கம் | வரை |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |
| 5. | | | |
| 6. | | | |
| 7. | | | |
| 8. | | | |

12. உயர்தொழிற் கல்வி கற்ற நிலையங்கள் : —

| நிலையம் | பின்பற்றியபயிற்சிநெறி | தொடக்கம் | வரை |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |
| 5. | | | |

13. முன்னைய நியமனங்கள் (காலவரன் ஒழுங்கில் சுருக்கமாகக் கொடுபடவேண்டியது) :—

| திணைக்களம் | நிலையம்/வேலை இடம் | பதவி | நிரந்தரமா தற்காலிகமா | தொடக்கம் | வரை |
|---|---|---|---|---|---|
| 1. | | | | | |
| 2. | | | | | |
| 3. | | | | | |
| 4. | | | | | |
| 5. | | | | | |
| 6. | | | | | |

14. சட்டமுறை நீதிமன்றத்தில் யாதேனும் குற்றவியல் தவறுக்காக யாதேனும் குற்றத்தீர்ப்பு உம்மீது அளிக்கப்பட்டதா ? (அங்ஙனமாயின் விபரங்களைக் கொடுக்கவும்) : ————.

15. விண்ணப்பதாரி அரசாங்க சேவையிலிருந்து விலக்கப்பட்டவரா ? (அங்ஙனமாயின் விபரங்கள் கொடுக்கவும்) : ————.

16. விண்ணப்பதாரி பணமுட்டு அற்றவரா ? பணமுட்டு இருப்பின் எவ்வளவுக்கு ? : ————.

இவ்விண்ணப்பப் படிவத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் உறுதியளிக்கின்றேன். இங்கு கொடுத்துள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின், தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் நியமனத்திற்குப் பின்னராயின் எவ்வித நஷ்ட ஈடின்றி விலக்கப்படுதற்கும் பாத்திரராவேன் என அறிவேன்.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : ————.

9-738—28.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 79.

---

எண் : பொ. நி. 14 அ/163

**கல்வி அமைச்சு**

பல்தொழில்நுட்ப நிலையங்களில் சட்ட விரிவுரையாளர் II ஆந்தர பதவி

கல்வி அமைச்சின் கீழுள்ள பல்தொழில்நுட்ப நிலையங்களில் சட்ட விரிவுரையாளர் II ஆந் தர பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழ்க்காணும் மாதிரிப் படிவ முறையில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு, "செயலாளர், கல்வி அமைச்சு (பொது நிர்வாகக் கிளை), மலாய் வீதி, கொழும்பு 2" என்ற விலாசத்துக்கு 1973 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 18 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியனவாகப் பதிவஞ்சல் மூலம் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் காகித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "பல்தொழில்நுட்ப நிலையங்களில் "சட்ட விரிவுரையாளர் II ஆந்தர பதவி" என அடையாளமிடப்பட வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—இப்பதவிகள் நிரந்தரமானவை. தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் உபகாரச் சம்பள உரித்துடைய பதவிகளை ஏற்கனவே அரசாங்கத்தின் கீழ் வகிக்காவிடின் அ. சே. சே. நிதிக்குக் கட்டணம் செலுத்த வேண்டும். தெரிவு செய்யப்படும் அபேட்சகர் நியமனத்தின்போது அரசாங்க சேவையில் அல்லது உள்ளூராட்சிச் சேவையில் உபகாரச் சம்பள உரித்துடைய பதவி ஒன்றினை வகிப்பின் உபகாரச் சம்பள உரித்தை அவர் தொடர்ந்து அனுபவிப்பார். தெரிவு செய்யப்படும் அபேட்சகர், ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாவிடின், முதற்கண் மூன்று வருட காலத்துக்குத் தகுதிகாண் முறையில் நியமிக்கப்படுவார். நிரந்தரமானதும் உபகாரச் சம்பள உரித்துடையதுமான பதவி ஒன்றினை அரசாங்கத்தின் கீழ் வகிக்கும் ஒருவர் தெரிவு செய்யப்படின் ஒரு வருட காலத்துக்கு அவர் பதில் கடமை புரிபவராக நியமிக்கப்படுவார்.

**குறிப்பு.**—தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் துவீபத்திலுள்ள எந்தப் பல்தொழில்நுட்ப நிலையத்திலும் சேவை புரியவேண்டியேற்படும். சிங்களத்தைப் போதனுமொழியாகக் கொண்ட பல்தொழில்நுட்ப நிலையங்களில் மாத்திரமே தற்சமயம் வெற்றிடங்கள் உள்ளன.

3. **சம்பளமும் படிகளும்.**—இப்பதவிக்குரிய திரட்டிய, வருடாந்தச் சம்பள அளவுத்திட்டம் வருமாறு :—ரூ. 6,720—12 × 360—ரூ. 11,040 (குறிப்பு : 69.10.01 க்கு முன்னரான ஒத்த சம்பள அளவுத் திட்டம் ரூ. 4,080—12 × 360—8,400 ஆகும்)

4. **தேவைப்படும் தகைமைகள்.**—விண்ணப்பதாரி ஒவ்வொருவரும் பின்வரும் தகைமைகள் பெற்றுள்ளாரெனத் திருப்திகரமான சான்று காட்ட வேண்டும் :—

(அ) சிறந்த ஒழுக்கமும் உடல்நலமும் உடையவராக இருக்க வேண்டும்.

(ஆ) 1973.10.18 அன்று 21 வயதுக்குக் குறையாதவராயும் 35 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். (அரசாங்க சேவையில் ஏற்கனவே உள்ளவர்களுக்கு இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அமையாது).

(இ) (i) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றின் சட்டம் தொடர்பான பட்டம் (எல். எல். பி.) அல்லது

(ii) உயர்நீதிமன்ற வழக்குரைஞராக (அப்புக்காத்தாக) இருக்க வேண்டும்.

(ஈ) உத்தியோகக் கடமைகளைப் புரிவதற்கான சிறந்த சிங்கள மொழியறிவு (சிங்களத்தைப் போதனுமொழியாகக் கொண்டுள்ள பல்தொழில்நுட்ப நிலையப் பதவிகளுக்கு விண்ணப்பிப்போர் விடயத்தில்) **அல்லது** உத்தியோகக் கடமைகளைப் புரிவதற்கான சிறந்த தமிழ்மொழியறிவு (தமிழைப் போதனுமொழியாகக் கொண்டுள்ள பல்தொழில்நுட்ப நிலையப் பதவிகளுக்கு விண்ணப்பிப்போர் விடயத்தில்) பெற்றிருக்க வேண்டும்.

**குறிப்பு.**—பின்வரும் விண்ணப்பதாரிகள் விடயத்தில் முன்னுரிமை வழங்கப்படும் :—

(அ) பல்கலைக் கழகமொன்றில் அல்லது சமமான அந்தஸ்திலுள்ள நிலையமொன்றில் கற்பித்தல் அனுபவம் பெற்றுள்ள விண்ணப்ப தாரிகள்.

(ஆ) தேவைப்படும் தகைமைகளைக் கொண்டு, கல்வியமைச்சின் கீழுள்ள தொழில்நுட்ப நிலையங்களில் ஏற்கனவே சேவை புரிபவர்களான விண்ணப்பதாரிகள்.

5. வேண்டப்படும் நேரத்தில், அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எவற்றையேனும் எல்லாவற்றையேனும் சமர்ப்பிக்க வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுப் பத்திரம் (ஞானஸ்நானப் பத்திரம் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்கான ஒழுங்குச் சட்டங்களின் நோக்கத்துக்கெனக் கொடுபடும் பிறப்புச்சாட்சிப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா).

(ஆ) பட்டப் பரீட்சைப் பத்திரம் அல்லது மிக உயர்ந்த கல்வித் தராதரப் பத்திரம்.

(இ) குணச் சான்றிதழ்கள் இரண்டு ; இவற்றிலொன்று பாடப்பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாக இருக்க வேண்டும்.

(ஈ) உயர்தொழில் தகைமையை அல்லது தொழில்நுட்பத் தகைமையை அல்லது இவ்விரு தகைமைகளையும் பற்றிய சான்றிதழ்கள்.

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைப் பத்திரம்.

**குறிப்பு.**—(1) சாதனங்களையாயினும் சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக்கூடாது.

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும் பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத்தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தத்தம் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்பட வேண்டும். விதிக்கப்பட்ட திகதிக்குப் பின் பெற்றுக் கொள்ளப்படும் எவ்விண்ணப்பமும், அது விதிக்கப்பட்ட திகதிக்கு முன் உரிய திணைக்களத் தலைவரால் பெற்றிருக்கப்பட்டு, தாமதத்துக்குப் போதிய காரணம் காட்டி அதனை ஏற்றுக் கொள்ளுமாறு திணைக்களத் தலைவரால் சிபார்சு செய்யப்பட்டாலன்றி ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

7. விண்ணப்பங்களேனும் விண்ணப்பங்கள் சம்பந்தமான கடிதங்களேனும் கல்வி அமைச்சின் செயலாளருடைய விலாசத்துக்கே அனுப்பப் பட வேண்டும் ; இவ்வமைச்சிலுள்ள எவ்வுத்தியோகத்தரின் பெயருக்கும் இவை அனுப்பப்படலாகா.

8. இவ்வர்த்தமானியின் I ஆம் பகுதி, (IIஅ) ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ளவையும் அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்கு அமைபவையுமான பொது நிபந்தனைகளுக்குக் கவனம் கோரப்படுகிறது.

9. விண்ணப்பங்கள் பெற்றுக் கொண்டமை பற்றி அறிவிக்கப்படும்.

கல்வி அமைச்சு,
மலாய் வீதி,
கொழும்பு 2,
1973 ம் ஆண்டு செப்டம்பர் மீ 18 ந வ.

செயலாளர்,
கல்வி அமைச்சு.

எண் : பொ. நி. 14அ/163

**மாதிரி விண்ணப்பப் படிவம்**

($8\frac{1}{2}'' \times 13\frac{1}{2}''$ அளவு அரைத்தாள்களில் தயாரிக்கப்பட வேண்டியது)

**கல்வி அமைச்சின் கீழுள்ள பல் தொழில்நுட்பக் கல்வி நிலையங்களில் II ஆந்தர சட்ட விரிவுரையாளர் பதவி**

1. பெயர் (முதலெழுத்துக்களுடன்) : திரு./திருமதி/செல்வி : ————.
2. முழுப்பெயர் : ————.
3. உத்தியோக முகவரி : ————.
4. சொந்த முகவரி : ————.
5. (அ) இலங்கையரா ? : ————.
   (ஆ) அங்ஙனமாயின், வம்சாவழி காரணமாகவா பதிவு காரணமாகவா ? : ————.
6. பிறந்த திகதி :— வருடம் : ————, மாதம் : ————, நாள் : ————.
7. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியன்றுள்ளபடி சரியான வயது : ————.
   வருடம் : ————, மாதம் : ————, நாள் : ————.

8. தற்போதய பதவி பற்றிய விபரங்கள் :—

(அ) பதவி : ————.

(ஆ) நிரந்தரமா தற்காலிகமா ? : ————.

(இ) உபகாரச் சம்பள உரித்துடையதா அற்றதா ? : ————.

(ஈ) பதவியில் உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறீரா ? : ————.

(உ) திணைக்களம் : ————.

(ஊ) நிலையம்/வேலை இடம் : ————.

(எ) திரட்டிய வருடாந்தச் சம்பள அளவுத்திட்டம் : ————.

(ஏ) திரட்டிய வருடாந்தச் சம்பள அளவுத்திட்டத்திலான தற்போதய படி : ————.

9. கல்வித் தகைமைகள் பற்றிய விபரங்கள் (சிங்களத்தில் பெற்றுள்ள தேர்ச்சி/தமிழில் பெற்றுள்ள தராதரப் பத்திர விபரங்கள் உட்பட) :—

| பரீட்சை | வருடம் | பாடங்கள் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |

10. உயர்தொழில் தகைமைகள் பற்றிய விபரங்கள் :—

| தராதரப் பத்திரம் | வழங்கியவர் | வருடம் | பாடங்கள் |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |
| 5. | | | |

11. பொதுக் கல்வி கற்ற நிலையங்கள் :—

| நிலையம் | வகுப்பு | தொடக்கம் | வரை |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |
| 5. | | | |
| 6. | | | |
| 7. | | | |

12. உயர்தொழில் கல்வி கற்ற நிலையங்கள் :—

| நிலையம் | பின்பற்றிய பயிற்சி நெறி | தொடக்கம் | வரை |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |
| 5. | | | |

13. முன்னைய நியமனங்கள் (காலவரன் ஒழுங்கில் சுருக்கமாகக் கொடுபடவேண்டியது) :—

| திணைக்களம் | நிலையம்/வேலை இடம் | பதவி | நிரந்தரமா தற்காலிகமா | தொடக்கம் | வரை |
|---|---|---|---|---|---|
| 1. | | | | | |
| 2. | | | | | |
| 3. | | | | | |
| 4. | | | | | |
| 5. | | | | | |
| 6. | | | | | |

14. சட்டமுறை நீதிமன்றத்தில் யாதேனும் குற்றவியல் தவறுக்காக யாதேனும் குற்றத்தீர்ப்பு உம்மீது அளிக்கப்பட்டதா ? : ————.
(அங்ஙனமாயின் விபரங்களைக் கொடுக்கவும்)

15. விண்ணப்பதாரி அரசாங்க சேவையிலிருந்து விலக்கப்பட்டவரா ? : ————.
(அங்ஙனமாயின் விபரங்கள் கொடுக்கவும்)

16. விண்ணப்பதாரி பணமுட்டு அற்றவரா ? பணமுட்டு இருப்பின் எவ்வளவுக்கு ? : ————.

இவ்விண்ணப்பப் படிவத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் உறுதியளிக்கின்றேன். இங்கு கொடுத்துள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின், தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் நியமனத்திற்குப் பின்னராயின் எவ்வித நஷ்ட ஈடின்றி விலக்கப்படுதற்கும் பாத்திரராவேன் என அறிவேன்.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : ————.

9-741—28.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 79

---

## கல்வி அமைச்சு

### தொழில் நுட்ப உதவியாளர் பதவிகள் (கனிய அளவீடு)

கல்வி அமைச்சில் தொழில் நுட்ப உதவியாளர் (கனிய அளவீடு) பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழ்க் காணும் மாதிரிப் படிவத்துக்குச் சரியாக அமையத் தயாரிக்கப் படும் விண்ணப்பங்கள் "செயலாளர் (பொது நிர்வாகக் கிளை), கல்வி அமைச்சு, மலாய் வீதி, கொழும்பு 2" என்ற விலாசத்துக்கு 1973 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 30 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்பட வேண்டும். இவ்வமைச்சில் உள்ள எவ்வுத்தியோகத்தரினதும் தனிப்பட்ட விலாசத்துக்கு விண்ணப்பங்கள் அனுப்பப்படலாகா.

2. **சம்பள விகிதம்.**—இப்பதவிக்கான சம்பளவிகிதம் பின்வருமாறு :— ரூ. 2,580—11/120, 4/180 வருடாந்தம் ; வருடாந்தச் சம்பளம் ரூ. 4,620 ஐ அடைந்தபின் அப்படியில் 2 வருடம் தங்கிய பின் ரூ. 4,800—3/180, 5/240—ரூ. 6,540 வருடாந்தம்.

1.10.69 இலிருந்து நடைமுறையிலிருந்து வரும் திரட்டிய வருடாந்தச் சம்பள அளவுத் திட்டம் பின்வருமாறு :—

ரூ. 5,016—11/144—4/180 ; வருடாந்த சம்பளம் ரூ. 7,320 ஐ அடைந்தபின் அப்படியில் ஒரு வருடம் தங்கியபின் ரூ. 7,500—3/180—5/240—9,240.

3. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—(i) இப்பதவி நிரந்தரமானது. தெரிவு செய்யப்படும் அபேட்சகர் அரசாங்கத்தின் கீழ் ஏற்கனவே உபகாரச் சம்பள உரித்துடைய பதவி ஒன்றினை வகிக்காவிடின், அவர் அ. சே. சே. நிதிக்குக் கட்டணம் செலுத்த வேண்டும். தெரிவு செய்யப்படும் அபேட்சகர், நியமனத் திகதியன்று அரசாங்க அல்லது உள்ளூராட்சிச் சேவையில் உபகாரச் சம்பள உரித்துடைய பதவியை வகிப்பவராயின் அவர் தொடர்ந்து உபகாரச் சம்பள உரித்து அந்தஸ்தை அனுபவிப்பார். தெரிவு செய்யப்படும் அபேட்சகர் ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாவிடின், முதற்கண், மூன்று வருடகாலத்துக்குத் தகுதிகாண் முறையில் நியமிக்கப்படுவார். அரசாங்க சேவையில் நிரந்தரமானதும் உபகாரச் சம்பள உரித்துடையதுமான பதவியை வகிக்கும் ஓர் உத்தியோகத்தர் தெரிவு செய்யப்படின் அவருடைய நியமனம் ஒரு வருட காலத்துக்குப் பதில் கடமை முறையில் அமையும்.

(ii) தெரிவு செய்யப்படுபவர், வேலையில் மேலும் அமர்த்தப்படுதற்கு தகுதியற்றவராகத் தகுதிகாண் காலத்தில் காணப்படுமிடத்து, அவர் ஏற்கனவே நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதுமான ஒரு பதவியை வகிப்பவராயின் தகுதிகாண் காலத்தில் அல்லது அக்கால முடிவில் அவருடைய நிலையான பதவிக்கு அவர் திருப்பி அனுப்பப்படுவார் ; நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதுமான ஒரு பதவியை வகியாதவராயின் சேவையிலிருந்து விலக்கப்படுவார்.

(iii) நியமிக்கப்படும் ஒருவர் சிங்களத்தில் விதிக்கப்பட்டுள்ள தரத்தை தகுதிகாண் காலத்தில் அடையத்தவறுமிடத்து சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு அவர் பாத்திரராவார் ; எனினும் சிங்களத்தில் தேர்ச்சி பெறுதற்கு அவர் உண்மையில் முயற்சி எடுத்துள்ளாரென நியமிக்கும் அதிகாரி திருப்திப்படின் சேவையிலிருந்து அவரை விலக்குதல் பிற்போடப்படலாம். விதிக்கப்பட்ட பரீட்சையில் உரிய திகதியிலிருந்து நியாயமான கால எல்லைக்குள் அவர் சித்தி அடைந்தால் நியமிக்கும் அதிகாரியால் அவருக்கு ஏற்படும் முதுமுறை இழப்பு புறக்கணிக்கப்படலாம்.

4. **வயதுக் கட்டுப்பாடு.**—விண்ணப்பதாரிகள் 40 வயதுக்குக் கூடாதவராய் இருக்க வேண்டும். ஏற்கனவே அரசினர் சேவையில் உள்ளவர்களுக்கு இவ்வயதுக்கட்டுப்பாடு அமையாது.

5. **கல்வித் தகைமைகளும் ஏனைய தகைமைகளும்.**—விண்ணப்பதாரிகள் :

(i) கணிதத்திலும் (தூய அல்லது பிரயோக) பௌதிகத்திலும் சித்தியுடன் சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் பெற்றிருக்க வேண்டும். அல்லது கணிதமும் (தூய அல்லது பிரயோக) பௌதிகமும் உட்பட ஆறு பாடங்களில் கல்விப் பொதுத் தராதரப் (சாதாரண தர) பத்திரம் பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாது தோற்றி, சித்தியடைந்திருக்க வேண்டும். அல்லது வேறு உயர்தர தராதரப் பத்திரம் பெற்றிருக்க வேண்டும்.

(ii) இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியில் கட்டட அமைப்புப் பயிற்சி நெறியின் I ம் II ம் படிகளைச் சித்திகரமாகப் பூர்த்தி செய்திருப்பதுடன் கட்டட அமைப்பில் மூன்று வருட பகுதி நேர எந்திரவியல் பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும். அல்லது வேறு உயர்தர தராதரப் பத்திரம் பெற்றிருக்க வேண்டும்.

(iii) அங்கிகரிக்கப்பட்ட ஒரு சிவில் எந்திரவியல் ஸ்தாபனத்தில் 10 வருட அனுபவம் பெற்றிருக்க வேண்டும் ; இதில் குறைந்தபட்சம் 3 வருட அனுபவம் கனியங்களின் அளவீட்டிலும் மதிப்பீடுகள் தயாரித்தலிலும் பெற்றிருக்கப் படவேண்டும்.

6. மேற்போந்த 5 ம் பந்தியில் குறிப்பிட்டுள்ள தகைமைகளைப் பெற்றுள்ளவர்களும் அரசினர் சேவையிலுள்ளவர்களுமானவர்களின் விண்ணப்பங்கள் தத்தம் பகுதித் தலைவர்கள் மூலம் அனுப்பப்பட வேண்டும்.

7. அரசினர் சேவையிலுள்ள பதவிகளுக்கு அமைபவையும் அரசினர் செய்திமடலின் I ம் பகுதி II ம் பிரிவில் பிரசுரிக்கப்பட்டுள்ளவையுமான பொது நிபந்தனைகளுக்கும் விசேட கவனம் கோரப்படுகிறது.

8. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களுடன் பின்வருவனவற்றின் பிரதிகளை (மூலப் பிரதியல்ல) இணைத்தனுப்ப வேண்டும் :—

(i) பிறப்புச் சாட்சிப் பத்திரம் (ஞானஸ்நானப் பத்திரம் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளின் கட்டளைச் சட்டத்தின் நோக்கத்துக்காக வழங்கப்படும் பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது).

(ii) பெற்றுள்ள ஆகக்கூடிய கல்வித் தராதரப் பத்திரங்கள் அல்லது தொழிற் தராதரப் பத்திரங்கள் அல்லது இவ்விரண்டு தராதரப் பத்திரங்களும்.

(iii) விண்ணப்பதாரியின் தகைமைகள், ஒழுக்கம், இப்பதவிக்கு நியமிக்கப்படுதற்கான அவருடைய தகுதி ஆகியவற்றைப் பற்றி சமீப காலத்தில் பெற்றுக் கொள்ளப்பட்ட மூன்று நற்சாட்சிப் பத்திரங்கள் (ஏற்கனவே அரசினர் சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் இவ்வுப பிரிவின் கீழ் கேட்கப்படும் நற்சாட்சிப் பத்திரங்களை அனுப்ப வேண்டியதில்லை).

குறிப்பு.—தராதரப் பத்திரங்களினதும் நற்சாட்சிப் பத்திரங்களினதும் பிரதிகள் விண்ணப்பதாரிக்கு திருப்பி அனுப்பப்படமாட்டா.

9. விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டதும் அங்ஙனம் அவை பெற்றுக்கொள்ளப்பட்டதாக விண்ணப்பதாரிகள் அறிவிக்கப்படுவார்கள். அத்தகைய அறிவித்தலை விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து இரண்டு கிழமைகளுக்குள் பெறத்தவறும் விண்ணப்பதாரிகள் அது பற்றி கல்வி அமைச்சின் செயலாளருக்கு (விலாசம், பொது நிர்வாகக் கிளை, கல்வி அமைச்சு, மலாய் வீதி, கொழும்பு 2) அறிவிக்க வேண்டும்.

செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
மலாய் வீதி, கொழும்பு 2,
1973, செப்ரெம்பர் 28.

**மாதிரி விண்ணப்பப் படிவம்**

தொழில் நுட்ப உதவியாளர் பதவிகள்
(அமைப்பு, கணிய அளவீடு)

1. முழுப் பெயர் :————.
(தெளிவாக எழுதவும்)

2. விலாசம் :————.

3. விண்ணப்ப முடிவுத் திகதியன்றுள்ளபடி சரியான வயது ?—
வரு :————. மாத :————. நாள் :————.
பிறந்த திகதி ?————.
(பிறப்புச் சாட்சிப் பத்திரத்தின் பிரதி இணைக்கப்பட வேண்டும்)

4. நீர் ஒரு இலங்கைப் பிரசையா ? அப்படியாயின் வம்சாவழியாகவா அல்லது பதிவு காரணமாகவா :? :————.

பின்வருவோர் பிறந்த இடம் :—

(i) விண்ணப்பதாரி :————.
(ii) விண்ணப்பதாரியின் தகப்பன் :————.
(iii) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப் பாட்டன் :————.
(iv) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப் பூட்டன் :————.

5. விண்ணப்பதாரி விவாகஞ் செய்தவரா விவாகம் செய்யாதவரா தாரமிழந்தவரா :————.

6. பெற்றுள்ள ஆகக்கூடிய கல்வித் தராதரங்கள் :————.
(தராதரப் பத்திரங்களின் பிரதிகளை இணைக்கவும்)

பின்வரும் மொழிகளில் பெற்றுள்ள அறிவு :—

(i) சிங்களம் :————.
(ii) தமிழ் :————.
(iii) ஆங்கிலம் :————.

7. விசேட தராதரங்கள், பயிற்சி, அனுபவம் பற்றி விபரங்கள் :————.

8. பாடசாலையிலிருந்து வெளியேறியபின் வகித்த உத்தியோகங்களும் உரிய திகதிகளும் :————.

9. நற்சாட்சிப் பத்திரங்கள் வழங்கியுள்ள பிரபல்யம் வாய்ந்த மூன்று ஆட்களின் பெயர்களும் பதவிப் பெயர்களும் :————.

10. உமக்கு பணமுட்டு யாதேனும் இருக்கிறதா ? அப்படியிருப்பின் உமது பணமுட்டு எவ்வளவுக்கு ? :————.

இவ்விண்ணப்பத்தில் கொடுபட்டுள்ள விபரங்கள் உண்மையானவையும் சரியானவையுமென நான் இத்தால் அத்தாட்சிப்படுத்துகிறேன். இவற்றில் எவையேனும் உண்மையற்றவை அல்லது பிழையானவை என நான் தெரிவு செய்யப்படுதற்குமுன் காணப்படின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் தெரிவு செய்யப்பட்ட பின் காணப்படின் சேவையிலிருந்து எவ்வித நஷ்ட ஈடுமின்றி விலக்கப்படுதற்கும் நான் பாத்திரராவேன் எனவும் அறிவேன்.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :————.

9-740—28.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 79.

---

**கல்வி அமைச்சு**

அரசினர் பாடசாலைகளில் விஞ்ஞானம்/கணிதம் கற்பிப்பதற்காக மாவட்ட சேவைத் திட்டத்தின் கீழ் விஞ்ஞான பட்டதாரி உதவி ஆசிரியர்களைச் சேர்த்தல்

மாவட்ட சேவைத் திட்டத்தின் கீழ் அரசினர் பாடசாலைகளில் விஞ்ஞானமும், கணிதமும் கற்பிப்பதற்காக விஞ்ஞான பட்டதாரிகளைச் சேர்த்தல் சம்பந்தமாய் 6.7.73 திகதி, இல. 67 கொண்ட ஸ்ரீ லங்காக் குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தலின்பால் கவனம் கோரப்படுகிறது.

2. அவ்வறிவித்தலின் 4 ஆம் பந்தியில் (இ) (i) உம் (ii) உம் காணப்படும் கல்வித் தகைமைகள் பெறிராத, ஆனால் "கணிதத்தை" ஒரு பாடமாகக் கொண்டு பட்டம் பெற்றுள்ள ஸ்ரீ லங்கா சர்வகலாசாலைப் பட்டதாரிகளும் இப் பதவிகளுக்காக விண்ணப்பிப்பதற்கு இத்தால் இடமளிக்கப்படுகிறது. அதற்கமைய 6.8.73 திகதி யன்று தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளவர்கள் குறித்த வர்த்தமானி அறிவித்தலில் கொடுபட்டுள்ள மாதிரிப் படிவத்துக்கு அமையத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை 20.10.73 ஆம் திகதிக்கு அல்லது அதற்கு முன் "கல்வி அதிபர், பாடசாலைப் பரிபாலனக் கிளை, கல்வி அமைச்சு, மலாய் வீதி கொழும்பு 2" எனும் விலாசத்துக்குக் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

பீ. உடகம,
செயலாளரும் கல்வி மா அதிபரும்.

1973 செப்ரெம்பர் மாதம் 10 ஆந் திகதி,
கல்வி அமைச்சு,
மலாய் வீதி,
கொழும்பு 2.

9-756—28.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 79.

சுகாதாரத் திணைக்களம்

கற்குநிலைத் தாதிமாரைச் சேர்த்தல், 1973

கற்குநிலைத் தாதிமரைப் பயிற்சி பெற விரும்பும் இலங்கைப் பிரசைகளான விவாகமாகாத பெண் அபேட்சகர்களிடமிருந்து 1973 ஒக்ரேபர் 27 ஆந் திகதி வரை அந்தந்தப் பிரதேசங்களின் சுகாதார சேவைக் கண்காணிப்பாளர்களால் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. **தகவுத்திறன் :—(i) கல்வித், தகைமைகள்.** —சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது கல்விப் பொதுத்தராதர (சாதாரணதர)ப் பரீட்சையில் சிங்களம்/தமிழ்ப் பாஷை, எண்கணிதம்/கணிதம் (மதமற்றிக்ஸ்) உட்பட ஆறுபாடங்களில் இரண்டுக்கு மேற்படாத தடவைகளுள் சித்தியெய்தியிருத்தல் வேண்டும். (கணக்குப் பதிவியல் (புக் கீப்பிங்) எனும் பாடம், எண்கணிதமாக அல்லது கணிதமாகக் கருதப் படுவதில்லை.

(ii) **வயதெல்லை.** —1973 ஒக்ரோபர் 27 ஆந் திகதியன்று 18 வயதுக்கும் 22 வயதுக்கும் உட்பட்டவர்களயிருத்தல் வேண்டும்.
சுகாதார அமைச்சில் உள்ள பெண் ஊழியர்களுக்குப் பின்வரும் சலுகைகள் உண்டு :

(அ) 27.10.1973 ஆந்திகதியன்று 35 வயதுக்கு மேற்படாதவர்களாக ஏற்கெனவே சுகாதார அமைச்சில் (நிரந்தரமாக அல்லது தற்காலிகமாக) சேவை செய்யும் பெண் ஊழியர்கள் வேண்டிய ஏனைய தகைமைகள் யாவும் உள்ளவர்களெனில், விண்ணப்பிக்கத் தகுதியுள்ளோராவர் ;

(ஆ) சுகாதார அமைச்சில் குறைந்தது ஆறுமாதங்கள் அல்லது அதற்கு மேல் தொடர்ச்சியாகச் சேவை செய்துள்ள அமய (கசுவல்) பெண் ஊழியர்கள் அவர்களது அமய சேவைக் காலத்தை அவர்களின் வயதுகளிலிருந்து கழித்துக் கணக்கிட அனுமதிக்கப்பட்டுள்ளனர். அங்ஙனம் கழித்தல் உச்ச வயதெல்லைக்குள் (அதாவது 18–22 வயதுக்குள்) வருவதற்கு அவர்களுக்கு உதவும்.

(iii) **பிற தகைமைகள்.** —

(அ) உயரம் 4 அடி 10 அங்குலங்களுக்குக் குறையாதிருத்தல் வேண்டும். (சுகாதார அமைச்சில் உள்ள பெண் ஊழியர்கள் விடயத்தில் இது கவனிக்கப்படமாட்டாது) ;

(ஆ) விவாகமாகாத பெண்களாக இருத்தல் வேண்டும் ;

(இ) நற்குணமும் ஆரோக்கியமான உடற்கட்டும், நாட்டின் எப்பாகத்திலேனும் சேவை செய்யக்கூடிய உடற் தகுதியும் இருத்தல் வேண்டும்.

3. **தேர்தல் தொகுதி அடிப்படை.** —ஆட்சேர்க்கும் நோக்கத்துக்காக அபேட்சகர் ஒவ்வொருவருக்கும் ஒரு தேர்தல் தொகுதி ஒதுக்கப்படும் தேர்தல் தொகுதியொன்றினைப் பிரதிநிதித்துவம் செய்யும் தகுதியின் பொருட்டு, ஒரு அபேட்சகர்—

(i) அந்தத் தேர்தல் தொகுதியில் பிறந்திருக்க வேண்டும்.

(ii) 1973 ஒக்ரோபர் 27 ஆந் திகதிக்கு உடனடுத்து முந்திய 6 வருடகாலத்தினுள் குறைந்தது 3 வருடங்களேனும் அத் தேர்தல் தொகுதியில் தொடர்ந்து நிரந்தரமாக வசித்திருத்தல் வேண்டும் ; அல்லது

(iii) அந்தத் தேர்தல் தொகுதியில் அடுத்தடுத்து வந்த 5 வருட காலம் தனது உயர்நிலைப் பாடசாலைக் கல்வியை அத்தேர்தல் தொகுதியில் பெற்றிருத்தல் வேண்டும்.

(iv) அபேட்சகரின் பெற்றோரில் எவராவதொருவர் அரசாங்கம் அல்லது உள்ளூராட்சித்தாபனம் அல்லது கூட்டுத்தாபனத்தின் கீழ் உள்ள மாற்றத்துக்குரிய சேவையொன்றில் சேவையாளராக இருப்பின், அவ்வபேட்சகர் தனது பெற்றோரில் எவராவதொருவர் பிறந்த இடத்தை தமது பிரதி நிதித்துவத் தேர்தல் தொகுதியான தெரிவு செய்ய அனுமதிக்கப்படுவார்.

**கவனிக்க** :—ஒன்றுக்கு மேற்பட்ட தேர்தல் தொகுதியிலுள்ள வெற்றிடங்களுக்குப் போட்டியிடுவதற்கு எந்த அபேட்சகரும் அனுமதிக்கப்படமாட்டார். ஆகவே ஒன்றுக்கு மேற்பட்ட தேர்தல் தொகுதிகளைப் பிரதிநிதித்துவம் வகிப்பதற்கு உரிமை கோரிக்கைகள் உள்ள அபேட்சகர்கள் தாம் விரும்பும் தேர்தல் தொகுதியாக ஒரு தேர்தல் தொகுதியைத் தெரிவு செய்தல் வேண்டும். அங்ஙனம் விரும்பித் தெரியும் தேர்தல் தொகுதியானது மேலே விதிக்கப்பட்ட கட்டளை வரம்பின் கீழ் அவ்வபேட்சகர் பிரதிநிதித்துவம் வகிப்பதற்குத் தகுதியுடைய தேர்தல் தொகுதியாக இருத்தல் வேண்டும். ஒரு முறை தெரிவித்த தேர்தல் தொகுதி விருப்பத்தினைப் பின்னர் மாற்ற முடியாது.

4. **விண்ணப்பிக்கும் முறை** —

(i) இத்துடன் இணைந்துள்ள மாதிரிப் படிவம் போன்று படிவத்தினைத் தயாரித்து அதில் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டும் அந்தப் படிவத்தை 8″ × 13″ அங்குலம் அளவான தாளில் தயாரிக்கலாம். அவசியமெனில் இரண்டு பக்கங்களையும் பிரயோகிக்க லாம். அபேட்சகர்கள் மேலே குறிப்பிட்டுள்ள தகைமைப் பரீட்சைகளை எடுத்துச் சித்தியெய்திய அதே மொழியில் அல்லது விரும்பினால் சிங்கள மொழியில் தமது சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பப்படிவத்தை நிரப்புதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்தைத் தட்டெழுத்தில் தயாரிப்பதற்கு ஆட்சேபணையில்லை.

(ii) இவ் விளம்பரத்தின் பந்தி 5 இல் காட்டப்பட்டுள்ளவாறு, சம்பந்தப்பட்ட சுகாதார சேவைக் கண்காணிப்பாளருக்கு 1973 ஒக்ரோபர் 27 ஆந்திகதியன்று அல்லது அதற்கு முன் போய்ச் சேருமாறு விண்ணப்பங்கள் பதிவுத்தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும்.

(iii) விண்ணப்பங்கள் இதன் கீழ் கையொப்பமிட்டிருப்பவருக்கோ இத்திணைக்களத்தில் உள்ள வேறெந்த உத்தியோகத்தருக்கோ சொந்தப் பெயர் விலாசமிட்டு அனுப்பப்படக்கூடாது. அது மாத்திரமன்றி இத்திணைக்களத்தில் உள்ள எந்த உத்தியோகத்தரிடமும் விண்ணப்பங்களை நேரில் கையளிக்கவும் கூடாது.

(iv) பதிவுத் தபால்மூலம் விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும். அத்துடன் அவற்றை வைத்தனுப்பும் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் " கற்குநிலைத் தாதிமாரைச் சேர்த்தற்கான விண்ணப்பம் " என்று தெளிவாக எழுதுதலும் அவசியம்.

(v) மேற்குறிப்பிட்ட சகல வேண்டுகோள்களுக்கும் நிபந்தனைகளுக்கும் இசைவாக இல்லாத ஒவ்வொரு விண்ணப்பமும் நிராகரிக்கப்படும்.

5. தேர்தல் தொகுதிகளும் அத்தேர்தல் தொகுதிகளின் கீழ் அடங்கும் சுகாதார சேவைக் கண்காணிப்பாளர் பகுதிகளும் பின்வருமாறு :—

| தேர்தல் தொகுதி | சம்பந்தப்பட்ட சு. சே. க. பகுதி |
|---|---|
| கொழும்பு வடக்கு | |
| கொழும்பு மத்தி | |
| பொறளை | |
| கொழும்பு தெற்கு | |
| வத்தளை | |
| நீர்கொழும்பு | |
| சட்டான | கொழும்பு |
| திவுலப்பிட்டியா | |
| மீரிகமை | |
| மினுவாங்கொடை | |
| அத்தனகலை | |
| கம்பஹா | |
| ஜாயலை | |

| தேர்தல் தொகுதி | சம்பந்தப்பட்ட ச. சே. க. பகுதி |
|---|---|
| மஹரை<br>தொம்பே<br>களனி<br>கொலன்னுவை<br>கோட்டே<br>தெஹிவளை–கல்கிசை<br>மொறட்டுவை<br>கஸ்பாவை<br>கொட்டாவை<br>ஹோமகமை<br>அவிசாவளை | கொழும்பு |
| ஹொறணை<br>புளத்சிங்கள<br>பண்டாரகம<br>பாணந்துறை<br>களுத்துறை<br>பேருவலை<br>மத்துகமை<br>அகலவத்தை | களுத்துறை . |
| டெடிகமை<br>கலிகமுவை<br>கேகாலை<br>றம்புக்கனை<br>மாவனெல்லை<br>எட்டியாந்தோட்டை<br>ருவான்வெலை<br>தெஹியோவிற்ற | கேகாலை |
| திரிகோணமலை<br>அநுராதபுரம்<br>மூதூர்<br>மதவாச்சி<br>ஹொறவப் பொத்தானை<br>மிகிந்தலை<br>கலாவேவ<br>கெக்கிராவை | அநுராதபுரம் |
| பிபிலை<br>மொனருகலை<br>மஹியங்கனை<br>பசறை<br>பதுளை<br>சொறனதொட்ட<br>ஊவா–பறனகம<br>வெலிமடை<br>பண்டாரவளை<br>அப்புத்தளை<br>மொனருகலை | பதுளை |
| கல்குடா<br>மட்டக்களப்பு<br>பட்டிருப்பு<br>அம்பாறை<br>கல்முனை<br>நிந்தவூர்<br>பொத்துவில் | மட்டக்களப்பு |
| பலப்பிட்டிய<br>அம்பலாங்கொடை<br>பெந்தற–எல்பிட்டிய<br>ஹினிதும<br>பத்தேகம<br>றத்கம<br>அக்மீமன<br>காலி<br>ஹபராதுவ | காலி |
| ஊர்காவற்றுறை<br>வட்டுக்கோட்டை<br>காங்கேசந்துறை<br>உடுவில்<br>யாழ்ப்பாணம்<br>நல்லூர்<br>கோப்பாய்<br>உடுப்பிட்டி<br>பருத்தித்துறை<br>சாவகச்சேரி<br>கிளிநொச்சி | யாழ்ப்பாணம் |

| தேர்தல் தொகுதி | சம்பந்தப்பட்ட சு. சே. க. பகுதி |
|---|---|
| வத்தேகம | கண்டி |
| அக்குறணை | |
| கலகெதற | |
| யட்டிநுவர | |
| உடுநுவர | |
| கண்டி | |
| செங்கடகலை | |
| குண்டசாலை | |
| தெல்தெனிய | |
| மினிப்பே | |
| ஹேவாகெற்ற | |
| கம்பளை | |
| நாவலப்பிட்டி | |
| மஸ்கேலிய | |
| வலப்பனை | |
| ஹங்குருங்கெற்ற | |
| கொத்மலை | |
| நுவரெலியா | |
| நிக்கவரட்டிய | குருநாகல் |
| யாப்பகுவ | |
| ஹிரியாலை | |
| வாரியப்பொல | |
| குளியாப்பிட்டி | |
| பிங்கிரியா | |
| கட்டுகம்பொல | |
| தம்பதேனியா | |
| பொல்காவலை | |
| குருநாகல் | |
| மாவத்தகம | |
| தொடங்கஸ்லந்த | |
| தம்புல்ல | மாத்தளை |
| லக்கல | |
| மாத்தளை | |
| ரத்தோட்டை | |
| பொலன்னறுவை | |
| மின்னேரியா | |
| வெளிகமை | மாத்தறை |
| அக்குரஸ்ஸ | |
| தெனியாய | |
| ஹக்மன | |
| கம்புறுபிட்டிய | |
| மாத்தறை | |
| தெவிநுவரை | |
| பெலியத்த | |
| முல்கிரிகல | |
| திஸமகராமை | |
| புத்தளம் | புத்தளம் |
| சிலாபம் | |
| நாத்தாண்டியா | |
| வென்னப்புவை | |
| கிரியெல்லை | இரத்தினபுரி |
| இரத்தினபுரி | |
| பெல்மதுல்லை | |
| பலாங்கொடை | |
| றக்வானை | |
| நிவித்திகலை | |
| கலவான | |
| கொலன்னை | |
| மன்னார் | வவுனியா |
| வவுனியா | |

6. **தெரிவு செய்யும் முறை :** அபேட்சகர்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ள தரவாரி அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர் :—

**தரவாரித் திட்டம் :**

(அ) அபேட்சகரொருவர் க. பொ. த. (சாதாரணதரப்) பரீட்சையில் அல்லது சி. பா. த. ப. பரீட்சையில் ஆறுபாடங்களில் பெற்ற தரங்களுக்குப் பின்வருமாறு புள்ளிகள் அளிக்கப்படும் :—

| | | | |
|---|---|---|---|
| விசேட சித்தி | .. | .. | .. 75 புள்ளிகள் |
| திறமைச் சித்தி | .. | .. | .. 50 புள்ளிகள் |
| சாதாரண சித்தி | .. | .. | .. 40 புள்ளிகள் |

(ஆ) பாடசாலைத் தராதரப் பத்திர (எச். எஸ். ஸி.) பரீட்சையில் அல்லது க. பொ. த. (உயர்தரப்) பரீட்சையில் சித்தியடைந்துள்ள அபேட்சகர் ஒருவர் மேலதிகமாக 30 புள்ளிகளுக்கு உரித்துடையவராவர்.

எனினும், க. பொ. த. (உயர்தரப்) பரீட்சையில் சித்தியடைந்துள்ள பாடங்களின் எண்ணிக்கை 4 பாடங்களுக்குக் குறைவாக இருக்குமிடத்து, புள்ளிகள் எதுவும் அளிக்கப்படமாட்டா. ஆயினும், க. பொ. த. (உயர்தரப்) பரீட்சை, உ. பா. த. பரீட்சை ஆகிய இரண்டிலும் சித்தியடைந்துள்ள ஒரு அபேட்சகரின் விடயத்தில், மேலதிகப் புள்ளிகளின் எண்ணிக்கை 30 புள்ளிகளாக மட்டுப் படுத்தப் பட்டிருக்கும். மாணிப்பட்டமொன்றினை அல்லது ஏதேனும் உயர் பட்டத்தினைப் பெற்றிருக்கும் ஒரு அபேட்சகருக்கு மேலதிகமாக 70 புள்ளிகள் அளிக்கப்படும். இவ்வெழுபது புள்ளிகள் க. பொ. த. (உயர்தரம்) அல்லது உ. பா. த. பத்திரத்துக்கு அளிக்கப்பட்ட 30 மேலதிகப் புள்ளிகளையும் உள்ளடக்கியதாக இருக்கும். மாணிப்பட்டம் உள்ள அபேட்சகர் க. பொ. த. (உயர்தரப், பரீட்சை அல்லது (எச். எஸ். ஸி.) உ. பா. த. ப. பரீட்சைக்கு மதிப்புப் பெறமாட்டார். ஒன்றுக்கு மேற்பட்ட மாணிப்பட்டங்களை அல்லது இதனகத்துக்குக் குறிப்பிட்டிராத பிற கல்வித்தகைமைகள் எதனையும் கொண்டிருப்பதற்கு மேலதிகப் புள்ளிகள் எதுவும் வழங்கப்படமாட்டாது.

(ஆ) தரவாரித் திட்டத்தின் பிரகாரம் நியாயமான புள்ளிகளைப் பெறும் அபேட்சகர்கள் வாய்மொழிப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். அப்பரீட்சைக்கு 200 புள்ளிகள் அளிக்கப்படும்.

வாய்மொழிப் பரீட்சையின் போது ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் சாதனங்களின் மூலப் பிரதிகளைச் சமர்ப்பிக்க வேண்டும் :—

(i) அபேட்சகரின் பிறப்புப் பதிவை உறுதிப்படுத்தும் பிரதி அல்லது அவருடைய நியாயமான வயதைக் குறிப்பிடுவதும் பதிவாளர் அதிபதியால் வழங்கப்படுவதுமான விசேட பிறப்புச் சாட்சிப்பத்திரம். (பாடசாலை அல்லது கல்வித் தேவைகளுக்காக வழங்கப்பட்ட விசேட பிறப்புச் சான்றிதழ் அல்லது ஞானஸ்நானப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது).

(ii) இலங்கைப் பிரசையாகப் பதிவு செய்த சான்றிதழ் அல்லது வம்சாவழிகாரணமாகக் கோரிய பிரசாவுரிமை ஏற்றுக்கொள்ளப்பட் டதைக்காட்டும் உத்தியோகபூர்வமான கடிதத்தின் மூலப் பிரதி (பொருத்தமானவிடத்து).

(iii) கல்வித் தகைமைத் தராதரப் பத்திரத்தின் மூலப்பிரதி அல்லது தராதரப் பத்திரம் வழங்கப்படாதுள்ள விடத்துத் தனிப்பட்ட அபேட்சகர்களுக்கு வழங்கப்படும் இலங்கை க. பொ. த. (சாதாரணதரப்) பரீட்சைப் பெறுபேற்றுத்தாள் அன்றேல் அபேட்சகரின் பாடசாலைத் தலைவரிடமிருந்து பெற்ற அசல் கடிதம் போன்ற ஏனைய உத்தியோகபூர்வமான சாதனங்கள்.

(iv) அடையாள அட்டை.

(v) நற்குணச் சான்றிதழ்கள் இரண்டு. இவற்றில் ஒன்று அபேட்சகர் கடைசியாகப் படித்த பாடசாலை அல்லது கல்லூரி அதிபரிட மிருந்து பெறப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

(vi) மேலே (3) ஆம் பந்தியில் உள்ள நியதிகளின் பிரகாரம் ஆட்சேர்ப்பு நோக்கங்களுக்காக அபேட்சகர் தெரிவு செய்த தேர்தல் தொகுதியில் பிறந்ததற்கு, கல்வி கற்றதற்கு அல்லது வசித்ததற்கு ஆதாரமான சாதனச் சான்று (உதாரணமாக பிறப்புச் சான்றிதழ், பாடசாலைத் தலைவரின் சான்றிதழ் அல்லது (டீ. ஆர். ஓ.) பகுதி அரசிறை உத்தியோகத்தரிடமிருந்து அன்றேல் கிராம சேவையாளரிடமிருந்து பெற்ற சான்றிதழ், ஆதாரத் தேவைக்கேற்றவாறு).

**கவனிக்க :**

(i) வாய்மொழிப் பரீட்சையின் போது தேவையான சாதனங்களைச் சமர்ப்பிக்க முடியாத அபேட்சகர்கள் நிராகரிக்கப்படுவார்களாதலினால் தேவையான சகல சாதனங்களையும் அவர்கள் தயாராக வைத்திருக்குமாறு கேட்கப்படுகிறார்கள்.

(ii) தேர்வில் வெற்றி பெறும் அபேட்சகர்கள் அது பற்றித் தனித் தனியே அறிவிக்கப்படுவர். வெற்றி பெறாத அபேட்சகர்களுக்கு அது பற்றி அறிவிக்கப்படமாட்டாது.

7. **வைத்தியப் பரிசோதனை :**—தேர்ந்தெடுக்கப்படும் அபேட்சகர்கள் நாட்டின் எப்பாகத்திலேனும் சேவை செய்வதற்குத் தகுதியான உடல்நிலை வாய்ந்தவர்களா என்பதை நிர்ணயிப்பதற்கான ஒரு வைத்தியப் பரிசோதனைக்குள்ளாகும்படி கோரப்படுவர். வைத்தியப்பரிசோதனையில் தகுதியற்றவர்களாகக் காணப்படும் அபேட்சகர்கள் தகைமை நீக்கஞ் செய்யப்படுவர்.

8. **விவாகஞ் செய்யாதிருத்தல் பற்றிய நிபந்தனைகள் :**—

(i) விண்ணப்பகாரர்கள் (சுகாதார அமைச்சின் ஊழியர்கள் அல்லாத ஏனையோர்) விண்ணப்பம் அனுப்பும் திகதியில் விவாகஞ் செய்யாதவர்களாக இருக்க வேண்டியதுடன் பயிற்சியளிக்கப்படும் காலமான மூன்று வருடங்களின் போதும் அதன் பின்னர் ஒரு பதவி நிலைத் தாதியாக நியமிக்கப்பெற்று 2 வருட காலம் முடியும் வரை அல்லது நேரத்துக்கு நேரம் விதிக்கப்படக்கூடிய ஒரு காலம் வரையும் விவாகம் செய்யாதிருத்தல் வேண்டும்.

(ii) சுகாதார அமைச்சில் கடமையாற்றும் விவாகமாகாத பெண் ஊழியர்கள் தேர்ந்தெடுக்கப்படுமிடத்து அவர்கள் பயிற்சி முடியும் வரை விவாகஞ் செய்யாதிருத்தல் வேண்டும்.

9. தேர்ந்தெடுக்கப்படும் அபேட்சகர்கள் பதவி நிலைத் தாதிமாராக நியமிக்கப்பட்டால் நியமனத் திகதியிலிருந்து குறைந்தது 5 வருட காலம் வரையேனும் சுகாதாரத் திணைக்களத்தில் சேவை செய்வதாகச் சுகாதார சேவைப் பணிப்பாளருடன் ஒரு உடன்படிக்கை செய்தல் வேண்டும்.

10. **பயிற்சித் திட்டம் :**—

(i) பயிற்சி வகுப்புகள் சிங்களத்திலும் தமிழிலும் நடாத்தப்படுகின்றன. பயிற்சிக் காலம் 3 வருடங்கள்.

(ii) பயிற்சிக் காலத்தின் போது நடைபெறும் பல்வேறு பரீட்சைகளிலும் சித்தியெய்தத் தவறும் அல்லது பயிற்சிக்காலத்தின்போது எந்த நேரத்திலாவது வேலையிலும், நடத்தையிலும் அதிருப்தி ஏற்படும் வகையில் நடந்துகொள்ளும் அல்லது பாடசாலை விடுமுறை, பரீட்சைவிதிகளுக்கு அமைந்தொழுகத் தவறும் மாணவர்கள் நட்டஈடு இல்லாமல் பயிற்சியிலிருந்து விலக்கப்படுவர். கற்குநிலைத் தாதிமாராகத் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் சுகாதார அமைச்சில் வேறு பதவிகளில் சேவையிலிருந்த மாணவர்கள் அவர்களது நிலையான பதவிகளுக்குத் திருப்பி அனுப்பப்படுவர்.

(iii) பயிற்சிப் பாடசாலைகளில் அமுலில் உள்ள விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் பட்டியலொன்று கற்கு நிலைத்தாதிமார் சகலருக்கும் பயிற்சிக்கு அனுமதிக்கப்படும்போது வழங்கப்படும். அக் கற்கு நிலைத்தாதிமார் அந்த விதிகளுக்கும் பிரமாணங் களுக்கும் காலத்துக்குக் காலம் வகுக்கப்படக்கூடிய வேறேதாவது விதிகள், பிரமாணங்களுக்கும் கட்டுப்பட்டு ஒழுக வேண்டியோராவர்.

11. **சம்பள அளவுத் திட்டமும், படிகளும் :**—

| | | |
|---|---|---|
| முதலாம் வருடம் | .. | ரூபா 3,000.00 வருடமொன்றுக்கு |
| இரண்டாம் வருடம் | .. | ரூபா 3,144.00 வருடமொன்றுக்கு |
| மூன்றாம் வருடம் | .. | ரூபா 3,288.00 வருடமொன்றுக்கு |

பதவிநிலைத் தாதிமாரின் திரட்டிய சம்பள அளவுத்திட்டம் பின்வருமாறு :—

சம்பள அளவுத்திட்டம் .. ரூபா 3,864—18 × 144—ரூபா 6,456 வருடமொன்றுக்கு. வினைத்திறமைகாண் தடை ரூபா 5,736 க்கு முன்

(i) சலவைப்படி :

பயிற்சியின்போதும் ஒரு பதவிநிலைத் தாதியாக நியமனம் பெற்ற பின்பும் வருடாந்தம் ரூபா 60/-.

(ii) சப்பாத்துப்படி : வருடாந்தம் ரூபா 20/-. (இத்தொகையில் 50 சதவீத அதிகரிப்பு தற்காலிகமாக வழங்கப்படும்).

இலவசச் சீருடைகளும் கிடைக்கத்தக்கனவாக இருப்பின் தளவாடங்களைக் கொண்ட இலவச குடிமனைகளும் வழங்கப்படும். தளவாடங்களைக் கொண்ட இலவச குடிமனைகள் வழங்கப்படுமிடத்து, உணவும் வழங்கப்படும். ஆனால் உணவுக்குப் பணஞ் செலுத்தப்பட வேண்டும்.

12. இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி I தொகுதி II இன் பந்தி " அ " வின் ஆரம்பத்தில் அரசுச் சேவைகளின் பதவிகளுக்கான நியமனங்களுக்குப் பொருத்தமானவையாகப் பிரசுரிக்கப்பட்டுள்ள பொது நிபந்தனைகளைப் பார்வையிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகம்,
தபாற்பெட்டி இல. 500,
கொழும்பு 1.
1973 ம் ஆண்டு செப்டம்பர் மீ 28 ந் வ.

ஜீ. அமரசேன,
பிரதிப் பணிப்பாளர் (நிருவாகம்),
சுகாதார சேவைப் பணிப்பாளருக்காக.

மாதிரிப்படிவம்

**கற்குநிலைத்.........* தேர்வுக்கான விண்ணப்பம்**

சுகாதாரத் திணைக்களம்

(இந்த விண்ணப்பப் படிவத்தை நிரப்புமுன் வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலில் உள்ள அறிவுறுத்துரைகளைக் கவனமாக வாசிக்குக)

| ................ | ................ |
|---|---|
| தேர்தல் தொகுதி (தனித்தனி எழுத்துக்களில்) | தொடர் இல. (இதில் ஒன்றும் எழுத வேண்டாம்) |

1. சுகாதார சேவைக் கண்காணிப்பாளரின் (எஸ். எச். எஸ்) பகுதி : ————.

2. (i) சொந்தப் பெயர் : ————.
(தனித்தனி எழுத்துக்களில்)
(ii) ஏனைய பெயர்கள் முழுவதும் : ————.

3. தபால் விலாசம் : ————.

4. கிராம சேவையாளர் பகுதி : ————.

5. பகுதி அரசிறை உத்தியோகத்தர் (டீ. ஆர். ஓ.) பகுதி : ————.

6. அபேட்சகர் உரிமைகோரும் வசிப்பிடத் தேர்தல் தொகுதி : ————.

7. அபேட்சகர் உரிமைகோரும் வசிப்பிடத்தின் நிருவாக மாவட்டம் : ————.

8. தேர்தல் தொகுதியில் வசிப்பதற்கான தகைமைகள் (வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலில் உள்ளபடி பொருத்தமான கூட்டினுள் " × " புள்ளடி இடுக.

| 3 (i) | 3 (ii) | 3 (iii) | 3 (iv) |
|---|---|---|---|
| | | | |

9. (i) பிறந்த திகதியும் இடமும் : ————.
(ii) 27.10.1973 ஆந் திகதியன்று வயது : ————. (ii) ........ வருடங்கள்........ மாதங்கள்........ நாட்கள்.

10. விவாகமானவரா, தனித்தவரா ? : ————.

11. உயரம் : ————. ........ அடி........ அங்குலம்.

12. கல்வி கற்ற மொழி அதாவது தகைமை அளிக்கும் பரீட்சையை அபேட்சகர் எழுதிச் சித்தியெய்திய மொழி : ————.

13. க. பொ. த (சாதாரணதரப்) பரீட்சையில் அல்லது சி. பா. த. ப. பரீட்சையில் அபேட்சகரின் சாதனை : ————.

| கட்டாய பாடங்கள் | சித்தியடைந்தவருடமும் மாதமும் | விசேடசித்தி 75 | திறமைச்சித்தி 50 | சாதாரணசித்தி 40 | உயர்கல்வித்தகைமைகளுக்கான புள்ளிகள் |
|---|---|---|---|---|---|
| 1. சிங்கள/தமிழ் பாஷை | | | | | |
| 2. எண்கணிதம்/கணிதம் | | | | | |
| இஷ்டபூர்வமான பாடங்கள் (4 பாடங்களுக்கு மேல் குறிப்பிட வேண்டாம்). | | | | | |
| 3. | | | | | |
| 4. | | | | | |
| 5. | | | | | |
| 6. | | | | | |
| மொத்தப்புள்ளிகள் | | | | | |

(i) ப. பொ. த. (உயர்தரம்) 4 பாடங்களில் அல்லது உ. பா. த. ப. (i)
(ii) மாணிப்பட்டம்—கலை/விஞ்ஞானம் (ii)

மொத்தம் :

14. அபேட்சகர்
(i) வம்சாவழியால் பிரசையா ? (i)
(ii) பதிவுசெய்யப்பட்டதனால் பிரசையா (ii)

15. இந்த விண்ணப்பத்தில் நான் கொடுத்துள்ள விவரங்கள் உண்மையானவையும், சரியானவையுமென நான் இத்தால் உறுதியளிக்கிறேன். அத்துடன் இதில் காணப்படும் விவரங்களில் எதுவும் பொய்யானதென்றோ, தவறானதென்றோ தேர்வுக்கு முன் கண்டுபிடிக்கப்பட்டால் நான் தகைமை நீக்கஞ் செய்யப்படப் பாத்திரவாளியாவேன் என்பதையும், நியமனத்துக்குப் பின் கண்டு பிடிக்கப்பட்டால் நட்டஈடு எதுவுமின்றி வேலையினின்றும் நீக்கப்படுவேன் என்பதையும் நான் நன்கு அறிவேன்.

: ————,
அபேட்சகரின் கையொப்பம்.

திகதி : ————.

16. அபேட்சகர் ஏற்கனவே சுகாதார அமைச்சின் ஒரு ஊழியராக இருப்பின் பின்வரும் விவரங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் :—

(i) தற்போது வகிக்கும் பதவி : ————.

(ii) பதவி நிரந்தரமானதா, தற்காலிகமானதா அல்லது அமய அடிப்படையிலானதா ? : ————.

(iii) தற்போதைய பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி : ————.

(iv) 27.10.1973 ஆந் திகதியன்று உள்ளவாறான சேவைக்காலம் : ————.

(v) அபேட்சகர் தற்போது சேவைசெய்யும் நிறுவகம் : ————.

### நிறுவகத் தலைவரின் சான்றிதழ்

சு. சே. க. (எஸ். எச். எஸ்). 1.

மேலே பந்தி 16 இல் திருமதி செல்வி..............................................சமர்ப்பித்துள்ள விவரங்கள் சரியானவை
(பெயரும், பதவிப்பெயரும்)

யென நான் உறுதியளிக்கிறேன். அன்னாரது விடயத்தில், செய்யப்பட்ட அவதானங்கள் பின்வருமாறு :—

(i) வேலை (i) ..............................................

(ii) நடத்தை. (ii) ..............................................

(iii) பொதுத் திறமை. (iii) ..............................................

..............................................
நிறுவகத் தலைவரின் கையொப்பமும் பெயரச்சும்.

திகதி :————

*பிற்குறிப்பு :

விண்ணப்பிக்கும் பதவியின் பெயர், விண்ணப்பப் படிவத்தின் உச்சியில் காணப்படும் வெற்றிடத்தில் புகுத்தப்பட வேண்டும் (உதாரணமாக விண்ணப்பம் கற்குநிலைத்தாதிமார் பதவிக்காயின், " தாதி " என்ற பதம் எழுதப்பட வேண்டும் ; கற்குநிலைமருத்துவ மாதர் பதவியாயின் " மருத்துவமாதர் " என்ற பதம் புகுத்தப்பட வேண்டும்).

9–712—28.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 79

---

## சுகாதாரத் திணைக்களம்—இலங்கை

### கற்குநிலை மருத்துவமாதர்களைத் தேர்ந்தெடுத்தல்—1973

கற்குநிலை மருத்துவமாதர்களுக்கான பயிற்சியை மேற்கொள்ள விரும்பும் இலங்கைப் பிரசைகளான திருமணமாகாத பெண்களிடமிருந்து விண்ணப்பங்களை 1973, ஒக்ரோபர் 27 ஆந் திகதிவரை அந்தந்த வேட்பாளர்கள் வசிக்கும் பகுதிகளின் சுகாதார சேவைக் கண்காணிப்பாளர் ஏற்றுக் கொள்வார்.

**2. தகைமை (i) கல்வித் தராதரங்கள் :**—சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சை அல்லது கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண)ப் பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில், சிங்களம்/தமிழ் மொழி, எண்கணிதம் அல்லது கணிதம் ஆகிய பாடங்கள் உட்பட ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். (கணக்குப் பதிவியல், எண்கணிதமாகவோ, கணிதமாகவோ கருதப்படமாட்டாது).

(ii) **வயதெல்லை :**—1973, ஒக்ரோபர் 27 ஆந் திகதி 18 வயதுக்கும் 25 வயதுக்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

(iii) **பிற தகுதிகள் :**—

(அ) உயரம் 4 அடி 10 அங்குலத்திற்குக் குறையாதிருத்தல் வேண்டும்;

(ஆ) திருமணமாகாத இலங்கையின் பெண் பிரஜையாக இருத்தல் வேண்டும் ;

(இ) நற்குணமும், சுக தேகமும், நாட்டின் எப்பகுதியிலேனும் சேவை செய்யக் கூடிய உடற் தகுதியும் இருத்தல் வேண்டும்.

**3. தேர்தற் பகுதி அடிப்படை :**—இந்த வர்த்தமானியின் வேறோரிடத்தில் " சுகாதாரத் திணைக்களம்—கற்குநிலைத் தாதிமார்களைத் தேர்ந்தெடுத்தல்—1973 " என்ற தலைப்பின் கீழ் வரும் விளம்பரத்தின் 3 ஆம் பந்தியின் நிபத்தனைகள் ஏற்புடைத்தாகும்.

**4. விண்ணப்பிக்கும் முறை :**—விண்ணப்பங்கள் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படுதல் வேண்டும். கடித உறையின் மேல் இடப்புற மூலையில் " கற்குநிலை மருத்துவமாதர்களைத் தேர்ந்தெடுத்தல் " என்ற பதங்கள் தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும். பந்தி 3 இல் குறிப்பிட்ட விளம்பரத்தின் பந்தி 4 (i), (ii), (iii), (v) ஆகியவற்றில் வேண்டப்படுபவை ஏற்புடைத்தாகும்.

**5.** சுகாதார சேவைகள் கண்காணிப்பாளர் பிரதேசங்களும் அந்தந்தத் தேர்தற் பகுதிகளும் :
**6.** தெரிவு செய்யும் முறையும் தரவாரித்திட்டமும் :
**7.** மருத்துவ சோதனை :
} இந்த வர்த்தமானியின் வேறோரிடத்தில் " சுகாதாரத் திணைக்களம்—கற்குநிலைத்தாதிமார்களைத்தேர்ந்தெடுத்தல்—1973 " என்ற தலைப்பின் கீழ் வரும் விளம்பரத்தின் 5, 6, 7 ஆம் பந்திகளில் காணப்படும் நிபந்தனைகள் ஏற்புடைத்தாகும்.

**8. திருமணஞ் செய்யாதிருப்பதற்கான நிபந்தனைகள் :**—விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்கும் திகதியன்று திருமணமாகாதவர்களாக இருத்தல் வேண்டும் என்பதுடன் 18 மாத பயிற்சிக் காலத்தின்போதும் திருமணஞ் செய்யாதிருத்தல் வேண்டும்.

**9. உடன்படிக்கை :**—வேட்பாளர்கள் தாங்கள் 18 மாதகாலப் பயிற்சியைத் திருப்திகரமாகப் பூர்த்தி செய்வார்கள் என்றும், மருத்துவமாது பதவிக்கு நியமிக்கப்படும் பட்சத்து அவர்கள் சுகாதார திணைக்களத்தில் ஆகக் குறைந்தது 5 வருடங்களேனும் பணிபுரிவார்களென்றும் உடன்படிக்கை செய்துகொள்ளவேண்டும்.

**10. பயிற்சித் திட்டம் :**—18 மாத காலப் பயிற்சி சிங்களத்திலும் தமிழிலும் நடத்தப்படும். மேலே 3 ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ள விளம்பரத்தின் பந்திகள் 10 (ii), (iii) ஆகியவற்றில் காணப்படும் நிபந்தனைகள் ஏற்புடைத்தாகும்.

**11. படிகளும் ஒன்றுதிரட்டிய சம்பளமும் :**—18 மாதகாலப் பயிற்சியின்போது ரூபா 2,100 படியாகச் செலுத்தப்படும். மருத்துவமாதாக நியமனம் பெறுகையில் ஒன்றுதிரட்டிய சம்பளம் வருடம் ஒன்றுக்கு ரூபா 2,640 60 × 16—ரூபா 3,600. ஆண்டொன்றுக்கு ரூபா 3,060 வும் ரூபா 3,240 உம் சம்பளமாகப் பெறுதற்கு முன்னர் வினைத்திறமைகாண் தடைகள் இருக்கும்.

12. இலங்கைக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி I, தொகுதி (IIஅ) இன் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரசாங்க சேவைப் பதவிகளுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளைப் பார்க்க.

ஜி. அமரசேன,
பிரதிச் சுகாதார பணிப்பாளர்,
(நிருவாகம்),
சுகாதாரசேவைப் பணிப்பாளருக்காக.

சுகாதார திணைக்களம்,
கொழும்பு 1,
28 செப்ரெம்பர், 1973.

4–713—28.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 79

வாகம்பத்து கோறளை பகுதிக்கு திடீர் மரண விசாரணையாளர் பதவி

மொனருகலை மாவட்டத்தில் பிபிலை பெரும்பாக உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தொலகல்வெல கிராம சேவையாளர் பகுதிக்கு திடீர் மரண விசாரணையாளர் பதவிக்கு கீழ்க்கண்ட தகைமைகள் உள்ள விண்ணப்பதாரர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன. இதற்கான விண்ணப்பங்கள் கீழ்க்கண்ட மாதிரிப் படிவத்தில், தமது சொந்தக் கையெழுத்தினுல் நிரப்பப்பட்டு, 1973 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 23 ஆம் திகதிக்கு முன் கிடைக்கு மாறு அரசாங்க அதிபர், மொனருகலை என்ற விலாசத்திற்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்க வேண்டும்.

2. இப்பதவிக்கு எவ்வித சம்பளமும் கொடுக்கப்பட மாட்டாது. ஒவ்வொரு திடீர் மரண விசாரணைக்கும் ரூபா 7/50 மாத்திரம் கொடுக்கப்படும்.

3. தகைமைகள்.—(அ) 1973 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 23 ஆம் திகதி 30 வயதுக்கு குறையாமலும் 60 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பதாரர் வாகம்பத்து கோறளை பிரிவில் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

(இ) குறைந்தளவு சிங்களம்/ஆங்கிலம் 7 ஆம் வகுப்பு சித்தி அடைந்தவராக இருத்தல் வேண்டும்.

(ஈ) சிறந்த ஒழுக்கமுடையவராகவும், நல்ல தேகாரோக்கியம் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் தங்களுடைய விண்ணப்பத்துடன் கீழ்க் கண்ட சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்து அனுப்ப வேண்டும் :

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம்.

(ஆ) கல்வித் தகைமைச் சான்றிதழ்.

(இ) அண்மையில் பெற்ற இரு நற்சாட்சிப் பத்திரங்கள்.

5. அரசாங்க அல்லது கூட்டுத்தாபன ஊழியர்களும், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களும் மேற்படி பதவிக்கு விண்ணப்பிக்க உரிமையற்றவர்களானபடியால் அவர்களுடைய விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

6. விண்ணப்பங்கள் கிடைத்ததுபற்றி அறிவிக்கப்படமாட்டாது.

நிமல் சமரசுந்தர,
உதவி அரசாங்க அதிபர்,
மொனருகலை அரசாங்க அதிபருக்காக.

கச்சேரி,
மொனருகலை.
73.09.15.

மாதிரிப் படிவம்

1. விண்ணப்பதாரரின் முழுப் பெயர் :————.
விலாசம் :————.
2. நிரந்தர வசிப்பிடமும், அங்கு வசிக்கும் காலமும் :————.
3. 1973.10.23 இல் வயது :————.
பிறந்த திகதி :———— பிறந்த இடம் :————
4. கல்வித் தகைமைகள் :————.
5. தற்போது செய்யும் தொழில் :————.
6. இதற்கு முன் ஏதும் தொழில் செய்திரா, அப்படியாயின் அதன் விபரங்கள் :————.
7. உமது சொத்துக்களின் பெறுமதியும் அதன் விபரங்களும் :————.
8. விண்ணப்பதாரர் கடனாளியா ? அவ்வாறுனல் அதுபற்றிய விபரங்கள் :————.
9. விண்ணப்பதாரர் ஏதாவது குற்றத்திற்காக நீதிமன்றத்தில் தண்டிக்கப்பட்டவரா ? :————.
10. இப்பதவிக்கு உமக்குள்ள வேறு தகைமைகள் இருந்தால் குறிப்பிடவும் :————.

மேலே தரப்பட்ட விபரங்கள் யாவும் உண்மை என உறுதிப் படுத்துகின்றேன். பதவி கிடைத்த பின்னரும் இங்கே என்னுல் தரப்பட்ட விபரங்கள் ஏதும் பிழை எனக் கண்டு பிடிக்கப்படின் என் நியமனம் நிராகரிக்கப்படும் என்பதையும் நான் அறிவேன்.

————,
விண்ணப்பதாரரின் ஒப்பம்.

திகதி :————.

9-739—28.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 79

---

இலக்கம். எஸ். எச். 3/73.

பொலிஸ் திணைக்களம்

பொலிஸ் கொஸ்தாப்புச் சாரதிகள் பதவிக்கு ஆட்சேர்ப்பு

மேற்குறித்த பதவிக்கு விண்ணப்பங்கள் கோரி 7.9.1973 ஆந் திகதிய 76 ஆம் இலக்க இலங்கைக் குடியரசு வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தலுக்கு கவனம் கோரப்படுகின்றது.

பந்தி 1 :—"பொலிஸ் கொஸ்தாப்புச் சாரதிகள் பதவிக்கு ஆட்சேர்ப்பு பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன" என்பது "பொலிஸ் திணைக்களத்தில் பொலிஸ் கொஸ்தாப்புச் சாரதிகள் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன" என திருத்தி வாசிக்கப்படல் வேண்டும்.

பந்தி 8. சேவை நிபந்தனைகள் :—"தபானக் கோவை" என்பது "தாபனக் கோவை" என திருத்தி வாசிக்கப்பட வேண்டும்.

மாதிரி விண்ணப்பப்படிவம்......

கேள்வி 6 :"————ஆம் திகதியில் வயது" என்பது "20.10.73 ஆம் திகதியில் வயது" என வாசிக்கப்படல் வேண்டும்.

டி. எஸ். இ. பி. ஆர். சேனநாயக்க,
பொலிஸ் அதிபர்.

பொலிஸ் தலைமைக் காரியாலயம்,
கொழும்பு 1,
18 செப்தெம்பர் 1973.

9-759—28.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 79

---

அரச திரைப்படக் கூட்டுத்தாபனம்

வெற்றிடங்கள்

அரச திரைப்படக் கூட்டுத்தாபனத்தில் பின்வரும் பதவிகளுக்கு ஸ்ரீ லங்கா பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**1. பதவியின் பெயர் : பிரதி பொது முகாமையாளர்**

**தொழில் விபரச் சுருக்கம் :** கூட்டுத்தாபனத்தின் விநியோக வேலைகளில் பொது முகாமையாளருக்கு பொறுப்பாயிருத்தல்.

**வயது :** 30 லிருந்து 50 வரை.

**சம்பள வீதம் :** சகலதும் உட்பட மாதம் ஒன்றுக்கு :
ரூபா 1,500—ரூபா 2,000

ரூபா $50 \times 10$
தகுதிகாண்நிலை ரூபா 1,600

**தகைமைகள் :**

(i) ஒரு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தின் பட்டம் அல்லது அதற்குச் சமானமான தொழில்தேர்வுத் தகைமையுடன் பகிரங்க சேவையில் அல்லது ஒரு கூட்டுத்தாபனத்தில் அல்லது பிரசித்தி பெற்ற ஒரு தனியார் நிறுவனத்தில் ஒரு ஆளணி உத்தியோகத்தராக குறைந்தபட்சம் 12 வருட அனுபவமுடையவராக இருத்தல் வேண்டும்.

(ii) விநியோகத் தொழிலில் அனுபவம் ஒரு கூடுதலான தகைமையாயிருக்கும்.

(iii) உத்தியோக மொழியில் தேர்ச்சி.

**2. பதவியின் பெயர் : பிரதி பொது முகாமையாளர் (நிதி)**

**தொழில் விபரச் சுருக்கம் :** செலவினத்தின் மீது வரவு செலவுக் கட்டுப்பாட்டை உறுதிப்படுத்தும் வண்ணமும் முறையான நீதி நிருவாகம், கட்டுப்பாடு என்பனவற்றுக்காக விதிகளையும் ஒழுங்கு விதிகளையும் ஆக்குவது உட்பட கூட்டுத்தாபனத்தின் எல்லா நிதிக் கருமங்களிலும் பொது முகாமையாளருக்குப் பொறுப்பாயிருத்தல்.

**வயது :** 30 லிருந்து 50 வரை.

**சம்பள வீதம் :** சகலதும் உட்பட மாதம் ஒன்றுக்கு :

ரூபா 1,500—ரூபா 2,000

ரூபா 50 × 10
தகுதிகாண் நிலை ரூபா 1,600

**தகைமைகள் :** வரைவுபெற்ற கணக்காளராக பட்டம்பெற்ற பின்பு நிதி நிருவாகக் கட்டுப்பாட்டில் 3 வருடங்களுக்குக் குறையாத அனுபவ முடையவராக இருத்தல் வேண்டும்.

ஒரு பொருந்தக்கூடிய வேட்பாளர், தகுதிக்கும் அனுபவத்திற்கு மேற்ப சபையின் தற்றுணிபில் நிர்ணயிக்கப்படும் சம்பளத்தில் நிய மிக்கப்படுவர்.

**3. பதவியின் பெயர் : உதவி பொது முகாமையாளர் (இயக்கம்)**

**வயது :** 30 லிருந்து 50 வரை.

**தொழில் விபரச் சுருக்கம் :** திரைப்படங்களையும் அதனோடு சேர்ந்த பொருள் வகைகளையும் களஞ்சியப்படுத்தல், அட்டவணைப்படுத்தல், அவற்றைத் திரைப்படமாளிகைகளுக்கு வழங்குதல், பரவலாக்குதல், அனுப்புதல், அத்துடன் திரைப்படமாளிகைகளிலிருந்து அவற்றை திரும்பப் பெறுதல் ஆகியவற்றுக்கான முழுமையான பொறுப்பாயிருத்தல்.

**வயது :** 30 லிருந்து 50 வரை.

**சம்பள வீதம் :** சகலதும் உட்பட மாதம் ஒன்றுக்கு :

ரூபா 1,250—ரூபா 1,750

ரூபா 50 × 10
தகுதிகாண் நிலை ரூபா 1,350.

**தகைமைகள் :**

(i) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்தின் பட்டம் அல்லது அதற்கு சமமான தகமையுடன் பகிரங்க சேவையில் அல்லது ஒரு கூட்டுத்தாபனத்தில் அல்லது விநியோகத் தொழிலில் ஈடுபட்டுள்ள பிரசித்திபெற்ற தனியார்துறை நிறுவனத்தில், குறைந்த பட்சம் 5 வருடகால அனுபவமுடையவராக இருத்தல் வேண்டும் ; அல்லது

(ii) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தின் இடைநிலைப் பரீட்சையில் தேர்ச்சிபெற்றவராக அல்லது அதற்குச் சமமான தகைமையுடன் பகிரங்க சேவையில் அல்லது ஒரு கூட்டுத்தாபனத்தில் அல்லது விநியோகத் தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்ற ஒரு பிரசித்திபெற்ற தனியார் துறைநிறுவனத்தில் ஒரு ஆளணி உத்தியோகத்தராக 15 வருடகால அனுபவமுடையவராக இருத்தல் வேண்டும்.

**4. பதவியின் பெயர் : கணக்குகள் உதவியாளர் தரம் II**

**தொழில் விபரச் சுருக்கம் :** கணக்கு வைத்தல், கணக்குப் பதிதல், நாள் அறிக்கைகளைப் பரிசீலித்தல், பெயரேடுகளில் பதிதல் மற்றும் கணக்குவைத்தல் வேலைகளுடன் சம்பந்தப்பட்ட புள்ளிவிபரவியற்கடமைகளை கவனித்தல்.

**வயது :** 23 லிருந்து 40 வரை.

**சம்பள வீதம் :** சகலதும் உட்பட மாதம் ஒன்றுக்கு :

ரூபா 350—ரூபா 550

ரூபா 15 × 8 ; ரூபா 20 × 4
தகுதிகாண் நிலை ரூபா 410.

**தகைமைகள் :** சிரேஷ்ட தராதரப்பத்திரம் அல்லது அதற்கு சமமான தகைமையுடன் மூன்று பாடங்களுக்குக் குறையாத திறமை சித்தியுடன் கணிதம், தூயகணிதம் அல்லது கணக்குகளில் திறமை சித்தியுடையவராக இருத்தல் வேண்டும்.

கணக்குகள் வேலையில் அனுபவம், திரைப்பட விநியோகம் சம்பந்தமான கணக்குகள் வேலையில் அனுபவமும் ஒரு கூடுதல் தகைமையாக இருக்கும். உத்தியோக மொழியில் தேர்ச்சியும் ஆங்கில அறிவும் இருத்தல் வேண்டும்.

**மு. கு. : அகநிலைக் கணக்காய்வு வேலையில் அறிவும் அனுபவமும் அல்லது கணக்குப் பதிவு வேலையில் அறிவும் அனுபவமுமுடையவர்கள் மாத்திரம்தான் விண்ணப்பிக்கலாம்.**

1. சகல விண்ணப்பங்களுக்கும் முடிவு திகதி 15, அக்டோபர் 1973.

2. சகல விண்ணப்பங்களும், பொது முகாமையாளர், அரச திரைப் படக் கூட்டுத்தாபனம், இல. 224, பௌத்தலோகா மாவத்தை, கொழும்பு 7, என்ற விலாசமிடப்பட்டு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படவேண்டும்.

3. பிரதிகள் மாத்திரம்தான் (மூலகங்களல்ல) அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

4. தபால் உறையின் இடதுபக்க மேல்மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர்களை எழுதி சகல விண்ணப்பங்களையும் அனுப்பி வைக்கவேண்டும்.

5. அரசாங்க திணைக்களங்கள் அல்லது கூட்டுத்தாபனங்களிலிருந்து விண்ணப்பிக்கும் சகல விண்ணப்பதாரர்களும் தமது திணைக்களங்களின் அல்லது கூட்டுத்தாபனங்களின் முதல்வர்களினூடாக தமது விண்ணப்பங்களை அனுப்பிவைக்க வேண்டும்.

6. ஒரு பதவிக்குமேல் விண்ணப்பிப்பவர்கள் ஒவ்வொரு பதவிக்கும் வெவ்வேறாக விண்ணப்பங்களை அனுப்பவேண்டும்.

7. தமது விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றதென்ற பதிலைப் பெற விரும்புபவர்கள், தன் விலாசமிட்டு, முத்திரை ஒட்டப்பட்ட தபாலுறைகளைத் தமது விண்ணப்பங்களுடன் சேர்த்து அனுப்பவேண்டும்.

8. கீழே தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திலுள்ள நியதிகளுக்கமைய சகல விண்ணப்பங்களும் தயாரிக்கப்பட வேண்டும்.

டி. பி. நிஹால்சிங்ஹா,
பொது முகாமையாளர்.

அரச திரைப்படக் கூட்டுத்தாபனம்,
124, பௌத்தலோகா மாவத்தை,
கொழும்பு–7.

**மாதிரி விண்ணப்பப் படிவம்**

..................பதவிக்கான படிவம்

1. முழுப்பெயர் : ————.

2. முகவரி : ————.

3. பிறந்த திகதியும் இடமும் : ————.

4. 15.10.73 இல் சரியான வயது : ————.

5. தேசிய இனம் : ————.

6. கல்வியும் பயிற்சியும் :—

| கல்வி பயின்ற பாடசாலைகளும் கழகங்களும் | திகதி | | சித்தி பெற்ற பரீட்சைகள் | சாதனைளும் வகித்த நிலைகளும் |
|---|---|---|---|---|
| | தொடக்கம் | வரை | | |
| | | | | |

7. சித்திபெற்ற உயர் பரீட்சை :—
சிங்களத்தில் :————.
தமிழில் : ————.
ஆங்கிலத்தில் : ————.
(சான்றிதழ் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்)

8. தொழில்நுட்ப/உயர்தொழிற் தராதரங்கள் : ————.

9. அனுபவம்—விவரங்கள் திகதிக் கிரமப்படி :————.

10. தற்போதைய ஊழியமும் சம்பளமும் :————.

11. உங்களை நன்கு அறிந்த ஆனால் உங்கள் உறவினரல்லாத சிபார்சு தரவல்லோர் மூவரின் பெயர்களும் முகவரிகளும் :
1. ————.
2. ————.
3. ————.

12. மற்றைய விபரங்கள் : ————.

இந்த விண்ணப்பப்பத்திரத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் செம்மையானவையும் என இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இந்த விண்ணப்பத்தில் நான் குறிப்பிட்டுள்ள விபரம் எதுவும் உண்மையற்றதாகவோ அல்லது செம்மையற்றதாகவோ இருப்பின், தேர்வுக்கு முன்னர் அத்தகைய தவறு கண்டுபிடிக்கப்படின், எனது தகுதியை இழக்கக்கூடும் என்பதையும், தேர்வுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்படின் பதவி நீக்கஞ் செய்யப்படலாம் என்பதையும் அறிவேன்.

————.
விண்ணப்பதாரரின் ஒப்பம்.

திகதி : ————.

9–742—28.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 79

### அரசாங்க அச்சகப் பகுதி

பாதுகாப்பு உத்தியோகத்தர் பதவி

மேலே குறிப்பிடப்பட்ட பதவிக்கு இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. 1973 ம் ஆண்டு ஒற்ரோபர் மாதம் 19 ந் திகதியன்ரே அல்லது அதற்கு முன்னரோ எனக்குக் கிடைக்கக் கூடியதாக விண்ணப்பங்கள் கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தில் எழுதப்பெற்று அனுப்பப்பட வேண்டும்.

2. சம்பள அளவு.—முதலாவது பயிற்சி ஆண்டில் வருடத்திற்கு 4,008/- ரூபா. இரண்டாவது பயிற்சி ஆண்டில் வருடத்திற்கு 4,296/- ரூபா. அதன்பின் பதவிக்குரிய திரட்டப்பட்ட சம்பள அளவு வருடத்துக்கு ரூபா 4,584—5 × 144—ரூபா 5,304.

3. சேவை நிபந்தனைகள்

(i) இப்பதவி நிரந்தரமானது.
(ii) இப்பதவி இளைப்பாற்றுச் சம்பளமற்றது.
(iii) தேர்ந்தெடுக்கப்பட்ட அபேட்சகர் அரசாங்க சேவைச் சகாய நிதிக்கு உதவு தொகை செலுத்துமாறு வேண்டப்படுவார்.

4. வேண்டப்படும் கல்வித் தகைமைகளும் ஏனைய தகைமைகளும்.—ஒவ்வொரு விண்ணப்பதாரும் பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்வதற்கான திருப்திகரமான சான்று காட்ட வேண்டும் :—

(அ) (i) சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அல்லது
(ii) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரணதரம்)ப் பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாது தோற்றி சிங்களம்/தமிழ், எண்கணிதம்/கணிதம் ஆகியவற்ரேடு ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அல்லது
(iii) சமமான அல்லது உயர்தரப் பரீட்சைகளில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(ஆ) குறைந்தது 5 அடி 6 அங்குல உயரமும் (விரிவற்ற) 34 அங்குல மார்பளவும் திடகாத்திரமான உடற்கட்டும் நல்ல தோற்றமும் உடையவராக இருப்பதோடு விவாகம் செய்யாதவராகவும் இருத்தல் வேண்டும்.

(3) கண்ணுடி இல்லாது "ஏ 2" வகுப்பு கண்பார்வை உடையவராக இருத்தல் வேண்டும்.

குறிப்புகள்

(i) பாதுகாப்புச் சேவையில் அல்லது பொலிஸ் சேவையில் "சார்ஜன்ட்" தரத்துக்குக் குறையாத பதவியை வகிப்பவராக அல்லது 8 வருட சேவையுடைய அரசாங்க ஊழியர் விடயத்தில் கல்வித் தராதரம் கனிட்ட பாடசாலைத் தரத்திற்குக் குறைக்கப்படும்.
(ii) முன்னுள் படைகளில் சேவை செய்தோர் அல்லது படைகளிலிருந்து விடுவிக்கப்பட்டோர்களுக்கு குறிப்பு (i) ல் சொல்லப்பட்ட சிவில் அந்தஸ்து ஏற்புடைத்தாகாது.
(iii) அரசாங்க ஊழியர் விடயத்தில் கண்ணுடி இல்லாது "ஏ 4" வகுப்பு கண்பார்வை உடையவராக இருத்தல் வேண்டும்.
(ஈ) 1973 சனவரி 1 ஆந் திகதியன்று 30 வயதுக்குக் குறைந்தோராகவும் 18 வயதுக்கு மேற்பட்டோராகவுமிருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்பத்துடன் கீழ்க் காணும் சாதனங்களின் பிரதிகளைச் சேர்த்தனுப்புதல் வேண்டும். அப்பிரதிகள் திருப்பி அனுப்பப்பட மாட்டாது :—

(அ) பிறப்புச் சான்றிதழ்,
(ஆ) கல்விச் சான்றிதழ்கள்,
(இ) அண்மையில் பெற்ற மூன்று நல்லொழுக்கச் சான்றிதழ்கள்.
(ஈ) தொழிலனுபவத்தை நிரூபிக்கும் சான்றிதழ்.

6. அரசாங்க சேவையில் உள்ளோரது விண்ணப்பங்கள் அவர்களது பகுதித் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும்.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகன்.

அரசாங்க அச்சகப் பகுதி,
த. பெ. இல. 507,
பேஸ்லைன் வீதி,
கொழும்பு 8,
செத்தெம்பர் 17, 1973.

### மாதிரி விண்ணப்பப் படிவம்

அரசாங்க அச்சகப் பகுதி

பாதுகாப்பு உத்தியோகத்தர் பதவி

1. முழுப்பெயர் :————.

2. பிறந்த திகதி :........ஆண்டு ........மாதம் ........நாள்.

3. வயது :........... வருடங்கள்........... மாதங்கள் ........... நாள்.

4. நிரந்தர முகவரி :————.

5. சாதியம் :————.

6. விவாகமானவர் அல்லது தனி ஆள் :————.

7. கல்வித் தகைமைகள் :————.

8. (i) உயரம் :...........அடி ...........அங்குலம்.
(ii) மார்பளவு (விரிவற்ற) ...........அங்குலம்.

9. (i) சிங்கள அறிவு :————.
(ii தமிழ் அறிவு :————.
(iii) ஆங்கில அறிவு :————.

10. சட்டமன்று ஒன்றில் நீர் ஏதும் குற்றத்துக்காளானீரா ? (அப்படியாயின் விபரங்களைத் தருக) :————.

11. நல்லொழுக்கச் சான்றிதழ்கள் வழங்கிய மூவரதும் பெயர், பதவி, விலாசங்களைத் தருக :————.

————,
விண்ணப்பதாரியின் கைபொப்பம்.

திகதி :————.

9-894—28.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 79

---

### இலங்கைப் பத்திரிகைப் பேரவை

வெற்றிடங்கள்

இலங்கைப் பத்திரிகைப் பேரவையில் பின்வரும் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :—

விண்ணப்பங்கள், இவ் அறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் நிரப்பப்பட்டு, "பத்திரிகை ஆணையாளர், இலங்கைப் பத்திரிகைப் பேரவை, தகவல், ஒலிபரப்பு அமைச்சு, 7, சேர் பாரன் ஜயதிலக மாவத்தை, கொழும்பு 1" எனும் முகவரிக்கு 10.10.73 ஆந் தேதியன்று அல்லது அதற்கு முன்னராக பதிவு அஞ்சல் மூலம் அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பம் வைத்து அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மூலையில் "........... .............பதவிக்கான விண்ணப்பம்" எனத் தெளிவாக எழுதப்படல் வேண்டும்.

விண்ணப்பங்கள் பெறப்பட்டமை அறிவிக்கப்படமாட்டாது.

பதவிகள் நிரந்தரமானவை. நியமனம் பெறுவோர் மூன்று வருட காலத்திற்குப் பரீட்சார்த்த நிலையில் பணிபுரிவர். அவர்கள் ஊழியர் ஏற்பாட்டு நிதியத்துக்கு உதவுதொகை கொடுப்பனவு செய்வர்.

விண்ணப்பிக்கும் பதவிகளுக்கென விதிக்கப்பட்ட தகைமைகளுக்குச் சான்ருக விண்ணப்பதாரர் சான்றிதழ்களின் பிரதிகளைச் சமர்ப்பிக்க வேண்டும். பின்வரும் சான்றிதழ்களின் பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைக்கப்படல் வேண்டும் :—

(1) பிறப்புச் சான்றிதழ்.
(2) அதி உயர் கல்வித் தகைமைகளின் சான்றிதழ்.
(3) அண்மையில் பெற்ற குணச் சான்றிதழ்கள் மூன்று.

(அரசசேவைகளில் பணிபுரியும் விண்ணப்பதாரர் குணச் சான்றிதழ்களைச் சமர்ப்பிக்க வேண்டியதில்லை. ஆனுல் அவ் விண்ணப்பங்கள் திணைக்களத் தலைவர்களூடாக அவர்களின் விதப்புரையுடன் அனுப்பப்படல் வேண்டும்).

இவ் வர்த்தமானியில் பகுதி I : தொகுதி (II அ) முற்பகுதியில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரச சேவையில் பதவிகளுக்காய நியமனங்களுக்கு ஏற்புடைத்தான பொது நிபந்தனைகளைப் பார்க்க.

பத்திரிகை ஆணையாளர்.

தகவல், ஒலிபரப்பு அமைச்சு,
7, சேர் பாரன் ஜயதிலக மாவத்தை,
கொழும்பு 1, செத்தம்பர், 24.9.1973.

### மாதிரி விண்ணப்பப் படிவம்

இலங்கைப் பத்திரிகைப் பேரவையில்..........பதவிக்கான விண்ணப்பம்

1. விண்ணப்பதாரரின் பெயர் :————.
   (1) முதற் பெயர் :————.
   (2) இதர பெயர்கள் :————.
2. அஞ்சல் முகவரி :————.
3. வயது :————.
   (1) 30.09.73 இல் வயது :————.
   (2) பிறந்த தேதி (பிறப்புச் சான்றிதழ் பிரதி இணைக்கப்பட வேண்டும்) :————.
4. தேசிய இனம் :————.
5. திருமணமானவரா, திருமணமாகாதவரா :————.
6. கல்வித் தகைமைகள் அல்லது தொழிநுட்பத் தகைமைகள் அல்லது இரண்டும் :————.
7. பாடசாலையிலிருந்து விலகியது தொட்டு ஆற்றிய தொழில் அல்லது பின்பற்றிய பயிற்சிநெறிகள் அல்லது இவ்விரண்டினதும் பற்றிய விபரங்கள் :————.
8. அரசின் கீழ் அல்லது அரச கூட்டுத்தாபனமொன்றின் கீழ் முன்னர் சேவையாற்றியிருந்தால், அச் சேவையிலிருந்து விலகியதற்கான காரணங்களைத் தருக :————.
9. குற்றமெதற்காகவேனும், சட்ட நீதிமன்றமொன்றினால் குற்றவாளியாகக் காணப்பட்டிருந்தால், குற்றத்தின் தன்மை, விதிக்கப்பட்ட தண்டனை பற்றிய விபரங்களைத் தருக :————.
10. குணச்சான்றிதழ்கள் வழங்கியோரது பெயர்கள், முகவரிகள், பதவிப் பெயர்கள் என்பவற்றைத் தருக :————.

இந்த விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவையெனவும் சரியானவையெனவும் நான் இத்தால் உறுதிப்படுத்துகிறேன். இதிலடங்கியுள்ள விபரங்கள் எவையேனும் பிழையானவையென அல்லது தவறானவையெனக் காணப்படுமிடத்து, அத்தகைய கண்டுபிடிப்பு தேர்வுக்கு முன்னரெனில் தகைமை இழப்பதற்கும், நியமனத்திற்குப் பின்னரெனில் பதவி நீக்கத்திற்கும் ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

தேதி :————.

**பதவிப் பெயர்.**—உதவிப் பத்திரிகை ஆணையாளர்.

**பதவிகள் எண்ணிக்கை.**—ஒன்று

**சம்பள அளவுத்திட்டம்.**—மாதமொன்றுக்கு ரூ. 1,000—10×50—ரூ. 1,500/- (திரட்டிய சம்பளம்)

தெரிவு செய்யப்படும் அபேட்சகரின் வேலையனுபவம், ஆற்றல் என்பவற்றுக்கமைய, சம்பள அளவுத் திட்டத்தின் பொருத்தமானதொரு சம்பள அளவில் அமர்த்துதல் கவனத்துக்கெடுத்துக்கொள்ளப்படலாம்.

**வயது.**—30.09.73 இல் 35—50 வருடங்கள். (அரச சேவையிலுள்ளோருக்கு அல்லது அரச கூட்டுத்தாபனமொன்றின் சேவையிலுள்ளோருக்கு மேல்வயதெல்லைக் கட்டுப்பாடு ஏற்புடையதன்று).

**தகைமைகள்.**—அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றின் சிறப்புப் பட்டதாரியாகவிருப்பதுடன், அரச சேவையில் அல்லது அரச கூட்டுத்தாபனமொன்றில் பதவிநிலை அலுவலராக ஆகக் குறைந்தது 10 வருட அனுபவம் பெற்றிருத்தல்

அல்லது

கலை இடைமாறிப் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையொன்றில் சித்தியடைந்திருப்பதுடன், அரச சேவையில் அல்லது அரச கூட்டுத்தாபனமொன்றின் கீழ் நிறைவேற்றுத் தரத்தில் ஆகக் குறைந்தது 15 வருட அனுபவம் பெற்றிருத்தல்

அல்லது

அரச சேவையில் அல்லது அரச கூட்டுத்தாபனமொன்றின் கீழ் 15 வருடங்களுக்கு மேல் சேவை புரிந்தவராயும், இச்சேவைக் காலத்தில் ஆகக் குறைந்தது 7 வருடங்கள் நிறைவேற்றுத் தரத்தில் அல்லது மேற்பார்வைத் தரத்தில் பணி புரிந்தவராயும் இருத்தல் வேண்டும்.

அல்லது

இலங்கை நிருவாக சேவையில் III ஆம் வகுப்பைச் சேர்ந்த உத்தியோகத்தர்களாயிருப்பதுடன், அரசின் கீழ் 10 வருடங்களுக்குக் குறையாத சேவை ஆற்றியிருத்தல்.

**பதவி பெயர்.**—அலுவலக உதவியாளர்.

பதவிகள் எண்ணிக்கை.—ஒன்று.

**சம்பள அளவுத் திட்டம்.**—மாதமொன்றுக்கு ரூ. 600—10×40—ரூ. 1,000/- (திரட்டிய சம்பளம்) தெரிவு செய்யப்படும் அபேட்சகரின் வேலையனுபவம், ஆற்றல் என்பவற்றுக்கமைய, சம்பள அளவுத்திட்டத்தின் பொருத்தமானதொரு சம்பள அளவில் அமர்த்துதல் கவனத்துக்கெடுத்துக் கொள்ளப்படலாம்.

**வயது.**—30.09.73 இல் 30—45 வருடங்கள்.

**தகைமைகள்.**—அரச சேவையில் பணி புரிபவராயிருப்பதுடன் ஆகக் குறைந்தது 10 வருடச் சேவையுடையவராயும், இச்சேவைக் காலத்தில் 03 வருடங்கள் நிறைவேற்றுத் தரத்தில் பணியாற்றியவராயும் இருத்தல் வேண்டும்.

அல்லது

அவர்கள் அரசாங்க பொது எழுதுநர் சேவையில் I ஆம் வகுப்பில் பணியுரியும் உத்தியோகத்தராயிருத்தல் வேண்டும். தாபன, கணக்கு வேலைகளில் அறிவுடைய அரச உத்தியோகத்தர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

**பதவிப் பெயர்.**—தட்டெழுத்தாளர் (தமிழ்).

**பதவிகள் எண்ணிக்கை.**—ஒன்று.

**சம்பள அளவுத் திட்டம்.**—மாதமொன்றுக்கு ரூ. 265—16×10—425/- மாதமொன்றுக்கு. ரூ. 295/- சம்பள அளவிற்கு முன்னர் வினைத்திறமை காண் தடை உண்டு.

**வயது.**—30.09.73 இல் 18—30 வருடங்கள். (அரச சேவையில் அல்லது அரச கூட்டுத்தாபனமொன்றில் பணி புரிவோருக்கு மேல் வயதெல்லைக் கட்டுப்பாடு ஏற்புடையதன்று).

**தகைமைகள்.**—க. பொ. த. (சாதாரண தரம்) பரீட்சையில் ஒரே தடவையில் மூன்று திறமைச் சித்திகளுட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். திறமைச் சித்திகளில் ஒன்று தமிழ் மொழியில் பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

தமிழ்மொழியில் திறமைச் சித்தி உட்பட மூன்று பாடங்களில் திறமைச் சித்தியுடன் சி. பா.த. ப. பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையொன்றில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அபேட்சகர்கள் தமிழில் நிமிடமொன்றுக்கு 25 சொற்கள் வீதம் தட்டெழுத்துப் பொறிக்கக்கூடிய தகைமை கொண்டிருக்க வேண்டும்.

அல்லது

வர்த்தக நிறுவனங்களில் 3 வருடங்களுக்குக் குறையாது பணி புரிந்துள்ள தட்டெழுத்தாளர்கள் (தமிழ்).

9-895 - 23.09.73 ந் திகதிய வர்த்தமானி (ப. 79.

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

### அரசினர் கலை, கலைப்பணிக் கல்லூரியில் 1974 ஆம் ஆண்டில் மாணவர்களைச் சேர்த்தல்

அரசினர் கலை, கலைப்பணிக் கல்லூரியில் 1974 ஆம் கல்லூரி ஆண்டில் மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும் பொருட்டு பின்வரும் தகைமைகளைக் கொண்ட ஆண், பெண் இருபாலாருமான அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழ்க் காணும் மாதிரிப் படிவ முறையில் தயாரிக்கப்படும் விண்ணப்பங்கள் 1973 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 27 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக கொழும்பு 7, ஹோட்டன் பிளேஸ், இல. 46 இல் அமைந்துள்ள அரசினர் கலை, கலைப்பணிக் கல்லூரி அதிபருக்குப் பதிவஞ்சல் மூலம் அனுப்பப் படவேண்டும்.

2. **பகல் நேரப் பயிற்சி நெறி.**—இப் பயிற்சி நெறி இரு பகுதிகளைக் கொண்டதாகும். முதலாம் பகுதி வரைதலும் ஓவியத்திலுமான 3 வருட பயிற்சி நெறியைக் கொண்டதாகும். இரண்டாவது பகுதி மேற்குறித்த பயிற்சி நெறியைத் தொடர்ந்து 2 வருடங்களில் முடிவுறும் தகுதித் தேர்வுப் பயிற்சி நெறியாகும். இப் பயிற்சி நெறிகள் கிழமை நாட்களில் மு. ப. 8.30 மணி தொடக்கம் பி. ப. 3.30 மணி வரை நடைபெறும்.

**1 ஆம் வருடம்.**—இப்பயிற்சி நெறிக்கு அனுமதிக்கப்படும் சகல மாணவர்களும் முதல் வருடம் சித்திரமும் (கிருபிக், சிற்பம் உட்பட) வடிவ அமைப்பிலான பின்வரும் 6 பாடங்களும் கற்பார்கள். மரப்பொருள் வடிவ அமைப்பு, ஆடைவகை வடிவ அமைப்பு, பீங்கான் பாண்ட வடிவ அமைப்பு, உலோக வடிவ அமைப்பு, தோற்பொருள் வடிவ அமைப்பு, தும்புப் பொருள் வடிவ அமைப்பு.

**2 ஆம் வருடம்.**—இரண்டாம் வருடம் மாணவர்கள் சித்திரமும் (கிருபிக், சிற்பம் உட்பட) வடிவ அமைப்பிலான வேறு இரு பாடங்களும் கற்பார்கள். முதலாம் வருட இறுதியில் நடாத்தப்படும் பரீட்சையில் பெறும் புள்ளிகளேயும் ஒவ்வொரு வடிவ அமைப்புப் பாடங்களையும் கற்கும் மாணவர்க்கான வெற்றிடங்களையும் பொறுத்தே வடிவ அமைப்புப் பாடங்களை மாணவர்கள் தெரிவு செய்யக்கூடியதாயிருக்கும்.

**3 ஆம் வருடம்.**—சித்திரக் கலையிலான தேசிய சான்றிதழ்ப் பரீட்சையில் சித்தியடையும் மாணவர் ஒருவர் சித்திரமும் (கிருபிக், சிற்பம் உட்பட) வடிவ அமைப்பிலான ஒரு பாடமும் 3 ஆம் வருடத்தின் போது கற்பார். தேசிய சான்றிதழ்ப் பரீட்சையில் பெற்ற புள்ளிகளினதும் தெரிவு செய்யப்படும் பாடத்தைக் கற்கும் மாணவர்க்கான வெற்றிடங்களின் எண்ணிக்கையினதும் அடிப்படையிலேயே வடிவ அமைப்பிலான பாடம் தெரிவு செய்யப்படலாம்.

3 ஆம் வருட முடிவில் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியடையும் மாணவர் ஒருவர் மூன்று வருட பயிற்சி நெறியின் பின் இந் நிலையத்தால் வழங்கப்படும் சான்றிதழுக்கு உரித்துடையராவர்.

3 ஆம் வருடப் பரீட்சையில் சித்தியடையும் மாணவர் ஒருவர், அப்பரீட்சையில் அவர் பெறும் புள்ளிகளினதும் குறிப்பான பிரிவிலுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையினதும் அடிப்படையில் பின்வரும் தகுதித் தேர்வுப் பயிற்சி நெறிகளில் ஒன்றைப் பின்பற்றலாம்.

- தேசியகலைத் தகுதித் தேர்வுச் சான்றிதழ்—சித்திரம்
- தேசியகலைத் தகுதித் தேர்வுச் சான்றிதழ்—சிற்பம்
- தேசியகலைத் தகுதித் தேர்வுச் சான்றிதழ்—கிருபிக்
- தேசியகலைத் தகுதித் தேர்வுச் சான்றிதழ்—மரப்பொருள் வடிவ அமைப்பு
- தேசியகலைத் தகுதித் தேர்வுச் சான்றிதழ்—ஆடைவகை வடிவ அமைப்பு
- தேசியகலைத் தகுதித் தேர்வுச் சான்றிதழ்—பீங்கான் பாண்ட வடிவ அமைப்பு
- தேசியகலைத் தகுதித் தேர்வுச் சான்றிதழ்—உலோகப் பொருள் வடிவ அமைப்பு
- தேசியகலைத் தகுதித் தேர்வுச் சான்றிதழ்—தோற்பொருள் வடிவ அமைப்பு
- தேசியகலைத் தகுதித் தேர்வுச் சான்றிதழ்—தும்புப் பொருள் வடிவ அமைப்பு

இத் தகுதித் தேர்வுப் பயிற்சி நெறிகள் இரு வருடகால அளவினவாகும். இரண்டாம் வருடத்தின்போது குறிப்பான ஒரு துறையில் செயல்முறைப் பயிற்சி அளிக்கப்படும். இத் தகுதித் தேர்வுப் பயிற்சி நெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்து இறுதிப் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களுக்கு உரிய தகுதித் தேர்வுச் சான்றிதழ் வழங்கப்படும்.

3. **மாலைநேரப் பயிற்சி நெறிகள்.**—(ஒளிப்படவியலிலான இரு வருட பயிற்சி நெறி) அரசாங்கத் திணைக்களமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிலையமொன்றில் நிரந்தர பதவி ஒன்றை வகிக்கும் அல்லது ஒளிப்படவியல் துறையில் தொழில் பயில்வோருக்குமாக ஒளிப்படவியலிலான இரு வருட மாலைநேரப் பயிற்சி நெறி ஒன்று நடாத்தப்படும் இப்பயிற்சி நெறிக்கு வேண்டிய சகல உபகரணங்களையும் பொருள்களையும் மாணவர்களே ஏற்பாடு செய்து கொள்ளவேண்டும். இப்பயிற்சி நெறிக்காக மாதாந்தம் ரூபா 10/- கட்டணம் அறவிடப்படும். ஒவ்வொரு மாதத்துக்குமுரிய கட்டணம் அம்மாதத்தின் 5 ஆவது வேலை நாளின் முன் செலுத்தப்பட வேண்டும். அன்றியும் மாணவர்கள் விரும்பினால், எஞ்சிய மாதங்களுக்குரிய கட்டணங்களையும் முன்னராகவே செலுத்தலாம். பயிற்சி நெறியின் முடிவில் நடாத்தப்படும் பரீட்சையின் பெறுபேற்று அடிப்படையில் சான்றிதழ் வழங்கப்படும். அரசாங்கத்தின் கீழ் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிலையமொன்றில் வேலைக்கமர்ந்துள்ளவர்கள் இதனை அத்தாட்சிப்படுத்தும் வகையில் ஒரு சான்றிதழையும் ஒளிப்படவியலில் தொழில் பயில்வோராக இருப்பவர்கள் தாம் பயிற்சி பெறுதலை அத்தாட்சிப்படுத்தும் வகையில் உரிய நிலையத்திலிருந்து அல்லது வேலைக்கமர்த்தியுள்ளவரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படும் அத்தாட்சிப் பத்திரத்தையும் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

4. **தகவுத்திறன்**

விண்ணப்பதாரி ஒவ்வொருவரும் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்பவராகத் திருப்தியான சான்று காட்டவேண்டும்.

(அ) இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும்.

(ஆ) சிறந்த ஒழுக்கம் உடையவராய் இருக்க வேண்டும்.

(இ) 74.01.01 அன்று 16 வயதுக்குக் குறையாதவராய் இருக்க வேண்டும் (21 வயதுக்குக் குறைந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்).

(ஈ) சி. பா. த. பத்திரப் பரீட்சையில் அல்லது இரு தடவைகளுக்கு மேற்படாது தோற்றி, சிங்கள/தமிழ் மொழியும் எண்கணிதமும் உட்பட 6 பாடங்களில் க. பொ. த. (சா. தர) பத்திரப் பரீட்சையில் சித்தி அடைந்திருக்க வேண்டும்.

மு. கு.—பகல் நேரப் பயிற்சி நெறிக்கு அனுமதி கோருவோர் சித்திரத்தில் திறமைச் சித்தி அடைந்திருக்க வேண்டும்.

5. (அ) **பிரவேசப் பரீட்சை**

வேண்டிய தகைமைகளைப் பெற்றுள்ள சகல விண்ணப்பதாரிகளும் எழுத்து மூலப் பரீட்சை ஒன்றுக்கு அழைக்கப்படுவார்கள். அப் பரீட்சையில் கூடுதலான புள்ளிகளைப் பெறுபவர்கள் நேர்முகப் பரீட்சை ஒன்றுக்கு அழைக்கப்படுவார்கள். இந்நேர்முகப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் தெரிவுகள் நடாத்தப்படும்.

(ஆ) **பிரவேச அட்டைகளும் நேரசூசியும்**

பிரவேசப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியுடையவரெனக் கணிக்கப்படும் விண்ணப்பதாரிகளுக்குப் பிரவேச அட்டைகளும் நேரசூசிகளும் அப்பரீட்சை தொடங்க இரு வாரங்களுக்கு முன்னர் அஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்படும். பிரவேசப் பரீட்சை நடைபெறும் தேதி புதினப் பத்திரிகைகள் வாயிலாக அறிவிக்கப்படும். தங்கள் விண்ணப்பம் கிடைத்தமை பற்றிய கடிதம் கிடைக்காத விண்ணப்பதாரிகள், பரீட்சை தொடங்க ஏழு நாட்களுக்கு முன்னர், பின்வரும் விபரங்களுடன், கல்லூரி அதிபருக்குத் தந்தி மூலம் விடயத்தை அறிவிக்க வேண்டும்.

(அ) விண்ணப்பதாரியின் பெயர் :————.

(ஆ) விண்ணப்பம் எந்தத் தபால் கந்தோரிலிருந்து அனுப்பப்பட்டதென்பது :————.

(இ) விண்ணப்பம் அனுப்பிய தேதியும் கடிதத்தின் பதிவு இலக்கமும் :————.

6. இந்நிலையத்தில் பகல் நேரப் பயிற்சி நெறியைப் பின்பற்றும் மாணவ, மாணவிகளிடமிருந்து எவ்வித கட்டணமும் அறவிடப்படமாட்டாது. ஆயின், கற்கைக்கு அவசியமான உபகரணங்கள் யாவற்றையும் மாணவ மாணவிகளே கொண்டுவரல் வேண்டும்.

7. உரிய முறையில் பூரணப்படுத்தப்படாது அல்லது விதிக்கப்பட்ட தேதியின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. விண்ணப்பப் பத்திரத்தில் உண்மைக்கு மாறான விபரங்கள் கொடுக்கப்பட்டுள்ளமை பற்றி வெளியானால்,

அவ் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். பிரவேச அனுமதி வழங்கப்பட்ட பின்னர்தானும் மேற்கூறியவை வெளியாயின் சம்பந்தப்பட்ட மாணவன்/மாணவி கல்லூரியிலிருந்து வெளியேற்றப்படுதற் குரியவராவார்.

ரி. ஓ. பி. பர்ணந்து,
கல்விப் பணிப்பாளர் (தொழில்நுட்பக் கல்வி),
கல்வி மா அதிபருக்காக.

கல்வி அமைச்சு,
மலாய் வீதி,
கொழும்பு 2,
1973 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 18 ந் திகதி.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**அரசினர் கலை, கலைப்பணிக் கல்லூரி**

**1974 ஆம் ஆண்டு பிரவேசித்தற்கான மாதிரி விண்ணப்பப் பத்திரம்**

1. சேர விரும்பும் பயிற்சி நெறி :————.

2. விண்ணப்பதாரியின் முழுப் பெயர் :————,

3. அஞ்சல் முகவரி :————.

4. பிறந்த திகதி :————.
   (அ) விண்ணப்பங்கள் ஏற்கும் கடைசித் திகதியன்றுள்ளபடி வயது :—
   (ஆ) வருடம் :————. மாதம் :————. நாள் :————.

5. ஆணு, பெணு என்ற விபரம் :————.

6. சாகியம் :————.

7. கல்வித் தகைமைகள் :————. (திறமைச் சித்திகளைக் குறிப்பிடவும்)

| சித்தியெய்திய பரீட்சையின் பெயர் | சித்தியெய்திய ஆண்டு | சித்தியெய்திய பாடங்கள் |
|---|---|---|

8. நீவிர் விண்ணப்பிக்கும் பயிற்சி நெறிக்கான விசேட தகைமை/திறமை அல்லது சிறப்பாற்றல் உம்மிடம் இருப்பின் விபரம் தருக :————.

9. விண்ணப்பதாரி ஏற்கனவே ஒரு தொழிலில் ஈடுபட்டிருப்பின் அதன் விபரம் :————.

10. விண்ணப்பதாரியின் தாயின்/தகப்பனின்/பாதுகாவலரின் —
   (அ) பெயரும் முகவரியும் :————.
   (ஆ) தாய்/தகப்பன்/பாதுகாவலர், விண்ணப்பதாரி இப் பயிற்சி நெறியிற் சேர்ந்து படிப்பதை அனுமதிக்கிருர் என்பதை நிரூபிக்கும் கையொப்பம் :————.

மேலே குறிப்பிட்ட விபரங்கள் உண்மையானவை என நான் உறுதியுரை அளிக்கின்றேன்.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :————.

மாலை நேரப் பயிற்சி நெறிக்காக விண்ணப்பிப்பவர்கள் தத்தம் திணைக்கள/நிலையத் தலைவரைக் கொண்டு பின்வரும் அத்தாட்சியையும் உறுதிப்படுத்த வேண்டும் :—

1. விண்ணப்பதாரியின் பெயர் :————.
2. விண்ணப்பதாரியின் கையொப்பம் :————.

மேலே குறிப்பிட்ட திரு./திருமதி/செல்வி :———— இந்தத் திணைக்களத்தில்/கூட்டுத்தாபனத்தில்/நிலையத்தில் நிரந்தர/உத்தியோகத்தராய்/தொழில் பயில்வோராக கடமை புரிகிருர் என இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

————,
திணைக்கள/கூட்டுத்தாபன/நிலையத் தலைவரின் கையொப்பம்.

தலைவரின் பெயரும் பதவியும் :————.

உத்தியோக முகவரி :————

தேதி :————.

9-746—28.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 79.

---

**உயர் நீதிமன்றம்**

**உயர் நீதிமன்ற சுருக்கெழுத்தாளர் உயர்தர சேவைக்கு ஆட்சேர்ப்பதற்காய பரீட்சை**

1973 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 24 ஆந் தேதி உயர்நீதிமன்றச் சுருக்கெழுத்தாளர் உயர்தர சேவையிற் சேர விரும்பும் ஆண் பரீட்சார்த்திகளுக்கும் பெண் பரீட்சார்த்திகளுக்குமான போட்டிப் பரீட்சையொன்று உயர்நீதிமன்றப் பதிவாளரால் மேலே குறிப்பிட்ட திகதியில் கொழும்பில் நடாத்தப்படும். பரீட்சை நடாத்தப்படும் இடமும் நேரமும் தகுதிவாய்ந்த பரீட்சார்த்திகளுக்கு அறிவிக்கப்படும்.

2. **வேதனம்.**—உயர் நீதிமன்றச் சுருக்கெழுத்தாளர் உயர்தர சேவைக்கு ஆண்டுக்கு 6,600/- ரூபாவில் தொடங்கி, 180/- ரூபா ஆண்டுச் சம்பளவேற்றங்களால் உயர்ந்து ஆண்டுக்கு 8,040/- ரூபா வரை செல்லும் திரட்டிய வேதனத்திட்டத்தில் அமர்த்தப்படுவர். இவ்வேதனத் திட்டத்தில் ஆண்டுக்கு 7,500/- ரூபாவுக்கு முன்னர் தகுதித் திறமைகாண் தடையுண்டு. (ஒன்று திரட்டுவதற்கு முன்பிருந்த சம்பளத்திட்டம் ரூபா 3,900/-—8×180—ரூபா 5,340/- ஆண்டுக்கு ரூபா 4,800/- க்கு முன்னர் திறமைத் தடை)

3. **நியமன நியதிகள்.**—இப்பதவிகள் நிரந்தரமானவை. ஆனல் ஓய்வூதியத்துக்குரியவை அல்ல. நியமனத்துக்காக தேர்ந்தெடுக்கப்படும் பரீட்சார்த்திகள் அரசாங்க சேமலாப நிதிக்கு சம்பளத்தில் ஒரு விகிதத்தைச் செலுத்த வேண்டும்.

4. **வயதுத் தகைமை.**—பரீட்சார்த்திகள் விண்ணப்பத் திகதி முடிவில் 17 வயதுக்குக் குறையாதவராயும் 40 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்கவேண்டும். அரசாங்க சேவையில் சேவை செய்யும் 40 வயதுக்கு மேற்பட்ட பரீட்சார்த்திகளுக்கு இவ்வயதுக் கட்டுப்பாடு அமையாது.

5. **சேவை நிபந்தனைகள்.**—(அ) தாபனக்கோவையின் இரண்டாம் அத்தியாயத்தின் 10 : 6 முதல் 10 : 12 வரையும் உள்ள உட்பிரிவுகளினதும் 10 : 13, 10 : 14, 10 : 16 ஆகிய உட்பிரிவுகளினதும் ஏற்பாடுகள் ஏற்புடையனவாகும்.

(ஆ) ஆண்டுக்கு 7,500/- ரூபாவுக்கு முன்னர் உள்ள திறமைத் தடையின் மேலான பதவி உயர்வு திருப்திகரமான சேவை நடத்தை என்பவற்றையும் உயர் நீதிமன்றப் பதிவாளரால் விதிக்கப்பட்ட பரீட்சை ஒன்றில் சித்திபெறுவதனையும் பொறுத்ததாகும்.

6. **கல்வித் தகைமைகள்.**—பரீட்சார்த்திகள் குறைந்த பட்சம் பின்வருவனவற்றில் ஒரு தராதரப் பத்திரமுடையவராயிருத்தல் வேண்டும்.

(அ) இலண்டன் சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் அல்லது கேம்பிரிட்ஜ் சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் அல்லது இலங்கை சிரேட்ட பாடசாலை தராதரப் பத்திரம் (ஆங்கிலம்) ; அல்லது

(ஆ) இலங்கை கல்விப் பொதுத் தராதரப் (சாதாரணதர) பத்திரப் பரீட்சையில்—
   (i) சிங்கள/தமிழ்
   (ii) ஆங்கிலப் பாஷை/ஆங்கில இலக்கியம்
   (iii) எண்கணிதம் அல்லது தூயகணிதம் அல்லது ஆரம்ப கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் உட்பட ஆறு பாடங்களில் இரு தடவைகளுக்கு மேற்படாது தோற்றி சித்திபெற்றும் இதில் ஐந்து பாடங்கள் ஒரே தடவையில் தோற்றி சித்தி பெற்றதாகவும் இருக்கல் வேண்டும்.

அல்லது

(இ) சிரேட்ட மனையியல் தராதரப் பத்திரம் ; அல்லது

(ஈ) இலங்கை தொழில் நுட்பக் கல்லூரியின் இறுதி வர்த்தக தராதரப்பத்திரம் (ஆங்கிலம்) ; அல்லது

(உ) கேம்பிரிட்ஜ் கனிட்ட தராதரப் பத்திரம் அல்லது இலங்கை கல்வித் திணைக்களத்தின் கனிட்ட பாடசாலை தராதரப் பத்திரம் (ஆங்கிலம்) அல்லது கீழே சொல்லப்பட்ட பத்திரங்களில் ஒன்றுடனுவது சேர்ந்து வழங்கப்பட்ட கல்வித் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பாடசாலையின் கனிட்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் (ஆங்கிலம்).

(i) இலண்டன் வர்த்தக திணைக்களத்தால் வழங்கப்பட்ட வர்த்தக கல்வித் தராதரப்பத்திரம் (இலங்கைத் திட்டம்) (பொது வர்த்தக அல்லது சுருக்கெழுத்து தட்டெழுத்துப் பகுதி) ;

(ii) இலங்கை கல்வித் கந்தோரினாலும் இலங்கை வர்த்தக திணைக்களத்தினாலும் வழங்கப்பட்ட வர்த்தக கல்வித் தராதரப் பத்திரம் (பொது வர்த்தக அல்லது சுருக்கெழுத்துப் பகுதி), அல்லது

உயர்தர வர்த்தக கல்வித் தராதரப் பத்திரம் (பொது வர்த்தக அல்லது சுருக்கெழுத்து தட்டெழுத்துப் பகுதி) ;

(iii) இலங்கை தொழில் நுட்பக் கல்லூரியால் கணக்கு பதிவாளருக்கும் சுருக்கெழுத்து தட்டெழுத்தாளருக்கும் வழங்கப்பட்ட உயர்தர வர்த்தக தராதரப் பத்திரம்.

குறிப்பு.—(அ) இப்பரீட்சையின் விண்ணப்பத் திகதி முடிவதற்கு முன் மேலே சொல்லப்பட்ட பரீட்சைகட்கு தோன்றியவர்கள் அதன் முடிவு வருவதற்கு முன்பதாக இந்தப் பரீட்சைக்கு விண்ணப்பித்தால் அந்த விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா.

(ஆ) உயர் நீதிமன்றச் சுருக்கெழுத்தாளர் (சாதாரண தர) சேவையில் இரண்டு ஆண்டு பூர்த்தி செய்த அல்லது அதற்கு மேலாக, திருப்திகரமான சேவை செய்தவர்களும் குறைந்த பட்சம் நான்கு வருட திருப்திகரமான (சாதாரணதர) சுருக்கெழுத்தாளர் மாறுதல் சேவையில் உள்ள சேவையாளர்களும் இப்பந்தியின் (iii) உபபகுதியில் குறிக்கப்பட்ட தகைமைகளை விலக்கியும் இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாவர்.

7. **விண்ணப்பங்கள்.**—(i) இவ்விண்ணப்பம், இறுதியில் தயாரிக்கப்பட்ட மாதிரிப் படிவத்திற்கிணங்க தயாரித்து 27 ந் தேதி ஐப்பசி மாதம் 1973 ஆம் ஆண்டு பகல் 12 மணிக்கோ அல்லது அதற்கு முன்பாகவோ கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் பதிவாளர், உயர் நீதிமன்றம், கொழும்பு என்னும் விலாசமிட்டு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். சொல்லப்பட்ட நேரத்துக்கு பின்பதாக கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் எதுவாயினும் அவை நிராகரிக்கப்படும்.

(ii) விண்ணப்பத்தில் ரூபா 15/- பெறுமதியுள்ள முத்திரை ஒட்டப்பட்டு அவை பரீட்சார்த்தியின் கையொப்பத்தால் அழிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(iii) அரசாங்க சேவையில் கடமையாற்றும் சேவையாளரின் விண்ணப்பங்கள் தாங்கள் கடமையாற்றும் அலுவலக தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். தெரிவு செய்யப்பட்டால் சேவையாளரை அந்தச் சேவையிலிருந்து இந்தச் சேவைக்கு விடுவிக்க சம்மதம் என்னும் குறிப்புரை இட்டிருக்கும் விண்ணப்பங்களே கவனத்துக்கெடுத்துக் கொள்ளப்படும்.

8. ஏற்கனவே அரசாங்க சேவையிலிருக்கும் பரீட்சார்த்திகள் தவிர்ந்த மற்றும் பரீட்சார்த்திகள் அண்மைக் காலத்தில் பெற்ற நற்சான்றிதழ் இரண்டினை இணைத்தல் வேண்டும். இவற்றுள் ஒன்று விண்ணப்பக்காரர் கடைசியாக படித்த கல்லூரியின் அல்லது நிறுவனத்தின் அதிபரிடமோ அல்லது தலைவரிடமோ இருந்து பெறப்பட்டதாயிருத்தல் வேண்டும்.

(ii) பிறப்புச் சான்றிதழில் ஒரு பிரதி. (உதவி பெறும் பாடசாலைக்கான ஒழுங்கு விதிகள் கோவையின் நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட ஞானஸ்நான சான்றிதழோ ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.)

(iii) சித்தியடைந்துள்ள ஆக உயர்ந்த பரீட்சை சான்றிதழின் பிரதியொன்று.

9. **பரீட்சைத்திட்டம்.**—(அ) ஐந்து நிமிடங்களுக்கான சுருக்கெழுத்து வேகம், இந்தப் பரீட்சையின் போது ஒரு நிமிடத்துக்கு 140 சொற்கள் என்ற விகிதத்தில் சட்டம் சம்பந்தமான விஷயம் வாசிக்கப்படும். வாசித்த விடயத்தை உடனடியாகவே 32 நிமிடங்களுள் தட்டச்சில் பொறித்தல் வேண்டும்.

(ஆ) மேற்குறித்த பரீட்சையில் சித்தியடையும் பரீட்சார்த்திகள் பருவ நீதிமன்றத்தில் நடைபெறும் குற்றவியல் விளக்கத்திலான சான்றுக் குறிப்புகளை பதிதல் ஆகிய ஒரு சோதனைக்கு 15 நிமிடங்கட்கு உட்படுத்தப்படுவர். அதன் பின்னர் அவர்கள் எடுத்த குறிப்புக்களை குறிப்பிட்ட நேரத்துக்குள் தட்டச்சில் பொறிக்கும்படி பணிக்கப்படுவர்.

(இ) மேற்குறித்த சோதனைகளில் சித்தியடையும் பரீட்சார்த்திகள் மூன்றாவது சோதனையொன்றிற்கும் தோற்றும்படி பணிக்கப்படுவர். இந்தச் சோதனையின் போது பருவ நீதிமன்றத்தின் முன்னதான குற்றவியல் விளக்கத்தின் போது நீதியரசரால் கூறப்படும் தொகுத்துரையை 15 நிமிடங்களில் எழுதி அதனை குறிப்பிட்ட நேரத்துக்குள் தட்டச்சில் பொறித்தல் வேண்டும்.

10. **அடையாள அட்டைகள்.**—எல்லாப் பரீட்சார்த்திகளும் தாம் இன்னாரென்பதை அடையாள அட்டையைக் காண்பிப்பதன் மூலம் அல்லது அடையாளம் அத்தாட்சிப்படுத்தப்பட்ட புகைப்படத்தை காண்பிப்பதன் மூலம் நிரூபித்தல் வேண்டும்.

11. **வைத்தியப் பரிசோதனை.**—தெரிந்தெடுக்கப்படும் பரீட்சார்த்தி இலங்கையின் எந்தப் பாகத்திலும் சேவை செய்வதற்கான உடல் திடகாத்திரம் உடையவரா என்பதை அறிவதற்காக வைத்தியப் பரிசோதனை ஒன்றுக்கு தோன்றும்படி பணிக்கப்படுவர்.

12. இக் கசெட்டின் I ம் பாகத்தின் (II அ) என்னும் பிரிவில் காணப்படும் அரச சேவைப்பகுதிகளுக்கு ஏற்புடையனவான பொது நிபந்தனைகளைப் பார்க்கவும்.

13. இந்த ஒழுங்கு விதிகளில் ஏற்பாடு செய்யப்படாத ஏதேனும் விடயம் உயர் நீதிமன்ற பதிவாளரின் தற்றுணிவின்படி கையாளப்படும்.

லோறி விக்கிரமசிங்கா,
உயர் நீதிமன்றப் பதிவாளர்.

உயர் நீதிமன்றம்,
கொழும்பு 12, 17.09.1973.

9-716—28.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 79

---

**ஆசுபத்திரி எழுதுவினைஞர் சேவையின் II ஆம் வகுப்பின் (அ) பிரிவுக்கு நியமிப்பதற்காகிய பரீட்சை—நொவெம்பர் 1973**

**பரீட்சைத் திகதி.**—ஆசுபத்திரி எழுதுவினைஞர் சேவையின் II ஆம் வகுப்பின் " அ " பிரிவுக்கு நியமிக்கும் பொருட்டு சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களின் 1973 நொவெம்பர் 24 ஆந் திகதியன்று பரீட்சை ஆணையாளரினால் தகைமைப் பரீட்சையொன்று கொழும்பில் நடாத்தப்படும்.

2. **பெறுபேறுகளைப் பிரசுரித்தல்.**—சித்திபெற்ற பரீட்சார்த்திகளின் பெயர்கள் இலங்கைக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும்.

3. **சம்பளமும் சேவை நிபந்தனைகளும்.**—ஆசுபத்திரி எழுதுவினைஞர் சேவையின் புதிய அமைப்பினைச் செயற்படுத்துவது தொடர்பாகவுள்ள 813 ஆம் இலக்க 24.3.72 ஆந் திகதிய ப. கூ. சுற்றறிக்கைக்குக் கவனம் கோரப்படுகின்றது.

4. **தகவுத்திறன்.**—இந்தப் பரீட்சைக்கு, ஆசுபத்திரி எழுதுவினைஞர் சேவையின் II ஆம் வகுப்பின் " ஆ " பிரிவிலுள்ள எழுதுவினைஞர்கள் மட்டுமே தோன்றலாம். அவர்கள், 1973 ஒக்ரோபர் மாதம் 1 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னதாகச் சேவையில் உறுதிப்படுத்தப்பட்டவர்களாகவும் வேலையம் நடத்தையும் திருப்திகரமாக உள்ளவர்களாகவுமிருத்தல் வேண்டும். இந் நோக்கத்திற்கு ஆசுபத்திரி எழுதுவினைஞர் சேவையின் பொது எழுதுவினைஞர் வகுப்பில் உறுதிப்படுத்தப்பட்டவர்கள் II ஆம் வகுப்பின் " ஆ " பிரிவில் உறுதிப்படுத்தப்பட்டவர்களாகக் கருதப்படுவர். ஆனால் அத்தகைய உத்தியோகத்தர்கள் 1971 செப்தெம்பர் 30 ஆந் திகதியன்று ஆசுபத்திரி எழுதுநர் சேவையின் பொது எழுதுவினைஞர் வகுப்பில் இருந்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. **விண்ணப்பங்கள்.**—(i) இப்பரீட்சைக்கு அனுமதிப்பதற்குரிய விண்ணப்பத்தின் மாதிரிப் பத்திரம் இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டிருக்கிறது. விண்ணப்பகாரர்கள் தமது விண்ணப்பங்களை முழுத்தாளின் அரைத்தாளில் (வேறு எந்த அளவுத் தாளிலுமல்லாது) தயாரித்தல் வேண்டும். இந்த நோக்கத்திற்கு ஒரு தாளையே உபயோகித்தல் வேண்டும். இந்தப் படிவத்தைத் தட்டெழுத்திலும் தயாரிக்கலாம்; ஆனால் அது பரீட்சார்த்தியின் சொந்தக் கையெழுத்தில் தெளிவாகவும் சரியாகவும் நிரப்பப்படல் வேண்டும்.

அரச கரும மொழிக் கொள்கையின் நோக்கத்திற்கென " புதிதாகச் சேர்ந்தவர்கள் " எனக் கருதப்படும் உத்தியோகத்தர்கள் அவர்களது விண்ணப்பங்களை அரச கரும மொழியில் தயாரித்து அம்மொழியில் நிரப்புதல் வேண்டும். " முன்சேர்ந்தவர்கள் " எனக் கருதப்படும் உத்தியோகத்தர்கள் விண்ணப்பப் பத்திரங்களை அரச கரும மொழியில் அல்லது ஆங்கிலத்தில் தயாரித்து நிரப்பும் விருப்புரிமை உடையவராவார்கள்.

(ii) இப்பரீட்சைக்கு முதல் முறையாகத் தோற்றும் அபேட்சகர்கள் பரீட்சைக் கட்டணம் கொடுக்கத் தேவையில்லை. ஆனால்

முதல் முறைக்குப் பின்னர் தோற்றும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் 25 ரூபா பெறுமதியுள்ள முத்திரைகளை உடையதாக இருத்தல் வேண்டும். அம்முத்திரைகள் கையொப்பமும் திகதியும் இடப்பட்டு பயனற்றதாக ஆக்கப்படல் வேண்டும்.

(iii) விண்ணப்பங்கள் பன்முனைப்படுத்தப்பட்ட கூறுகளின் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும்; அத்துடன் அவர்களின் திருப்திகரமான சேவை பற்றிய சான்றிதழ்களும் அனுப்பப்படல் வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பப் பத்திரத்துடன் இணைத்துள்ள சான்றிதழ்களில் தாம் கையெழுத்திட்டு இருக்கிறார்களோவென வும் பன்முனைப்படுத்தப்பட்ட கூறுகளின் தலைவர்கள் உறுதிப் படுத்திக் கொள்ளல் வேண்டும். தகுதிபெற்ற பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்களை அவர்கள் பதிவுத் தபால் மூலம் சௌக்கிய சேவைப் பணிப்பணிப்பாளர் தபாற் பெட்டி இல. 500 கொழும்பு என்னும் விலாசத்திற்கு 27 10.73 ஆந் திகதியன்றோ அதற்கு முன்னனரோ அனுப்புதல் வேண்டும். அந்தத் திகதிக்குப் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

6. **பரீட்சைக்கு அனுமதி.**—(i) அங்கீகரிக்கப்பட்ட விண்ணப் பங்களுக்குரிய பரீட்சார்த்திகளுக்குச் சௌக்கிய சேவைப் பணிப் பாளர் அனுமதி அட்டைகளை வழங்குவார். இப்பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தில் மேற்பார்வை உத்தியோகத்தரிடம் தமது அனுமதி அட்டைகளைக் காட்டுதல் வேண்டும். இவ்வனுமதி அட்டைகளின்றி அவர்கள் பரீட்சைக்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்.

(ii) பரீட்சார்த்திகளுக்குத் தனித்தனியாக நேரசூசி வழங்கப் படமாட்டாது. இவ்வறிவித்தலின் ஒன்பதாம் பந்தியில் கொடுக்கப் பட்டிருக்கும் நேரசூசியைப் பரீட்சார்த்திகள் குறித்துக் கொள்ள வேண்டும்.

(iii) பரீட்சை நடாத்துவதைப் பற்றிப் பரீட்சை ஆணையாள ரினால் விதிக்கப்பட்ட விதிகளுக்கும் பிரமாணங்களுக்கும் பரீட்சார்த்திகள் கட்டுண்டவராவர். இவ்விதிகளையும் பிரமாணங் களையும் மறுப்பவர்கள் அன்னாரினால் விதிக்கப்படும் எந்தத் தண்டனைக்கும் ஆளாவர்.

(iv) இவ்வறிவித்தலின் முதலில் பரீட்சார்த்திகளின் விதிகளும் பிரமாணங்களும் வேறாக அச்சிடப்பட்டுள்ளன.

7. **அரசாங்க உத்தியோகத்தர்கள் பரீட்சை எடுப்பதற்கு விடுதலை.**—சௌக்கிய சேவைப் பணிப்பாளரினால் அங்கீகரிக்கப் பட்டுள்ள விண்ணப்பங்களுக்குரியவர்களாகத் தத்தம் பெரும் பாகங்களில் உள்ள உத்தியோகத்தர்களுக்கு இப்பரீட்சை எடுப்ப தற்காகக் கடமை விடுதலை போல் விடுதலை வழங்கும்படி பன் முனைப்படுத்தப்பட்ட கூறுகளின் தலைவர்கள் கேட்கப்படுகிறார்கள். பயணச் செலவுகள் கொடுக்கப்படமாட்டா.

8. **பரீட்சைத் திட்டம்.**—பரீட்சைக்கான பாடங்களும் ஒவ்வொரு பாடத்துக்கும் ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகளும் இதன் கீழ் தரப் படுகின்றன. சகல விடைத்தாள்களிலும் கூடாத கையெழுத்துக் கும் எழுத்துக்கூட்டற் பிழைகளுக்கும் புள்ளிகள் கழிக்கப்படும். தெளிவற்ற முறையில் எழுதும் பரீட்சார்த்திகள் தகைமை நீக்கஞ் செய்யப்படப் பாத்திரராவர்.

1. கணக்குகள் (எக்கவுண்ஸ்) ஒன்றரை (மணித்தியால் வினாப் பத்திரம்) இந்த வினாப் பத்திரம் கணக்குகள் குறுக்குக் நெடுக்குக் கூட்டல்கள் (ரொட்ஸ்) ஆரம்ப கணக்குப்பதிவியல் (எலிமென்ரறி புக்கீப்பின்) முதலிய வற்றில் வினாக்களைக் கொண்டிருப்பதுடன் இலக்கங்களைப் பிழையின்றிக் கையாளுவதில் உள்ள திறமை, கணக்குகள் பற்றிய சாதாரண அடிப்படைப் பிரமாணங்களின் அறிவு என்பவற்றைச் சோதிக்கும் வகையிலும் அமையும். இப்பாடம் பற்றிய நிதிப் பிரமாணங்களின் அறிவு திணைக்கள விதிகள் என்பன அவசியம் ... 100

2. ஆசுப்பத்திரி நிருவாக நடைமுறை அலுவலக முறைமைகள் என்பன பற்றிய பிரமாணங்கள் (இரண்டு மணித்தியாலங்கள்). ... ... ... 200

"அ" ஒழுங்கு விதிகள், நடைமுறை: அலுவலக முறைமை (இரண்டு மணித்தியால வினாத்தாள்)—உத்தியோகத்தர் ஒருவர் எழுதுதநராக இருத்தலிலான பயன்பாட்டையும், தகுதியினையும் பரிசோதித்தற்கு இந்தத்தாள் அமைக்கப்பட்டிருக்கும். அவர், உண்மையான உத்தியோகக் கடிதத் தொடர்களின் சுருக்கத்தினைச் செய்யவும், கட்டளையொன்றின் நியதிகளின்படி வரைவு கடிதமொன்றைச் சமர்ப்பிக்கவும், சுட்டுமுறைமை, கோப்பிடல் போன்ற வற்றிலான அறிவினைக் காட்டவும், தமது கருத்துக்களைத் தெளிவாக எழுதி விளக்கக் கூடிய திறனைக் கொண்டிருக்கவும் வேண்டப்படலாம்.

திணைக்கள விதிகள், பிரமாணங்களிலும் தாபனக் கோவையின் பின்வரும் அத்தியாயங்களிலும் அறிவு பெற்றிருத்தல் அவசியம்:

அத்தியாயங்கள்.—II, III, V, VI, VII (பந்திகள் 3, 7, 10 மட்டுமே) XVI. XXI, XXXII, XXXIII, XXV, XXXVI, XXXVIII, XXXIX, XL, XLIII, XLIV.

அரசாங்க சேவை, ஆணைக்குழு ஒழிக்கப்பட்டிருந்தாலும், இவ் வினாத்தாளிற்காக அ. சே. ஆ. விதிகள் பயன்படுத்தப்படும்.

குறிப்பு.—(i) ஆசுப்பத்திரி எழுதுவினைஞர் சேவையில் சேரு வதற்கான போட்டிப் பரீட்சைக்கு எந்த மொழியில் தோற்றினார் களோ அதே மொழியிலேயே பரீட்சார்த்திகள் இந்த இரண்டு வினாப்பத்திரங்களுக்கும் விடையெழுத வேண்டும். போட்டிப் பரீட் சையில்லாமல் ஆரம்பத்தில் சேர்த்துக்கொண்டவர்களின் விடயத் தில் சேவையில் சேருவதற்கு ஒரு உத்தியோகத்தர் எந்த மொழி யில் தகைமை பெற்றிருந்தாரோ அதே மொழியில் இவற்றுக்கு விடை எழுத வேண்டும். இந்த இரண்டு வகுதிகளிலும் அடங்கும் உத்தியோகத்தர்கள் விரும்பினால் தமது இட்டப்படி இந்த இரண்டு வினாப் பத்திரங்களுக்கும் அரசகரும மொழியில் (சிங் களத்தில்) விடை எழுதலாம்.

அரச கருமமொழிக் கொள்கையின் நோக்கங்களுக்கான முன் சேர்ந்தவர்களாக (ஓல்ட் என்றன்ஸ்) கருதப்படுபவர்களும் ஆங் கில மொழி மூலம் சேர்க்கப்பட்டவர்களுமான உத்தியோகத்தர் கள் இந்த இரண்டு வினாப்பத்திரங்கள் ஒவ்வொன்றுக்கும் மூன்று கச் சிங்களத்தில் அல்லது ஆங்கிலத்தில் விடையெழுதலாம்.

(ii) இப்பாடங்களில் தகைமைபெற, இந்த வினாப்பத்திரங் களில் ஒவ்வொன்றுக்கும் குறைந்தது 33 சதவீதமான புள்ளிகளை யும், இரண்டு வினாப்பத்திரங்களுக்குச் சராசரி 40 சதவீதமான புள்ளிகளையும் பெற வேண்டுமென்று பரீட்சார்த்திகள் கோரப் படுவர்.

புள்ளிகள்

3. சிங்களம் அல்லது தமிழ்—

(அ) ஒன்றரை மணித்தியால எழுத்துமூல வினாப்பத் திரம்

(ஆ) வாய்மொழிப் பரீட்சை ... ... 100

எழுத்துமூலம் வினாப்பத்திரம் பின்வருவனவற்றுள் அப்பியாசங் கள் அடங்கும்—

(i) சாதாரண வாக்கியப் பந்தியொன்றைக் கிரகித்து விடை எழுதல்.

(ii) பின்வரும் மாதிரிகளைச் சார்ந்த வியாசங்களில் ஒரு வியா சம் அல்லது அதற்கு மேற்பட்ட வியாசங்கள்: விவரணம், சம்பாஷணை, கடிதம் எழுதல்:

(iii) மொழி பெயர்த்தல் (அ) வசனங்களைச் சிங்களத்தில் அல் லது தமிழில்.

(ஆ) ஒரு உரைநடைப் பந்தியை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தல்.

(iv) சொற்களின் கருத்து, செயற்பாடு, தொடர்பு என்பனவும் சொற்றொடர்கள், வாக்கியங்கள், பிழைகள் ஆதியனவும்.

**கவனிக்க.**—(i) இந்தப் பரீட்சை பரீட்சார்த்திக்கு மொழியில் வேலை செய்யும் அறிவிருக்கிறதா என்பதைச் சோதிப்பதற்கான ஒரு தரத்தில் அமையும்.

(ii) மேற்போந்த குறிப்பு (ii) இல் விதிக்கப்பட்டுள்ள தேவை களைத் திருப்தி செய்யும் பரீட்சார்த்திகள் இப்பாடத்திலுள்ள ஒரு வாய்மொழிப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். அத்தகைய பரீட் சார்த்திகள் தகைமை பெறுவதற்குச் சிங்களத்தில் அல்லது தமி ழில் உள்ள எழுத்துப் பரீட்சைக்கும் வாய்மொழிப் பரீட்சைக்கும் ஒதுக்கப்பட்ட மொத்தப் புள்ளிகளில் ஆகக் குறைந்தது 35 சத வீதம் புள்ளிகளைப் பெறல் வேண்டும்.

(iii) இரண்டு வினாப்பத்திரங்களுக்கும் அதாவது (1) கணக்கு கள் (2) பிரமாணங்கள், நடைமுறைகள், அலுவலக முறைமைகள் ஆகிய இரண்டு வினாப்பத்திரங்களுக்கும் சிங்களத்தில் அல்லது தமி ழில் விடையெழுதும் பரீட்சார்த்திகள் சிங்களம் அல்லது தமிழ் என்ற (3) ஆம் பாடத்துக்கு விடை எழுதுவதிலிருந்து விதிவிலக் களிக்கப் பெறுவர்.

(i) கீழ்க்காணும் தகைமைகளில் ஏதாவதொன்றைக் கொண்ட பரீட்சார்த்திகளும் சிங்களம் அல்லது தமிழ்ப் பாடத்திலிருந்து விதிவிலக்களிக்கப் பெறுதற்குத் தகுதியுடையோராவார்.

சிங்களத்திலிருந்து விதிவிலக்குப் பெறுவதற்கு.—(அ) பொதுத் திறைசேரியின் உயர்தரச் சிங்களத் தேர்ச்சிப் பரீட்சையில் சித்தி;

(ஆ) சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் (சிங்களம்);

(இ) சிங்களப் பாஷை, தற்காலச் சிங்களம், சாஸ்திரீய சிங்களம் என்பவற்றில் ஒன்றை ஒரு பாடமாகக் கொண்ட (ஆங்கில) சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரம்;

(ஈ) இலங்கைக் கல்விப் பொதுத் தராதர (சாதாரணதர)ப் பத்திரம். சிங்கள மொழிப் பாடத்திட்டம் "ஏ" அல்லது "பி";

(உ) 1964 மார்ச் 24 ஆந் திகதிய 640 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சிங்களத் தேர்ச்சிப் பரீட்சை 1 ஆம் தரத்திற்குச் சித்தி.

**தமிழிலிருந்து விதிவிலக்குப் பெறுதற்கு—**

(அ) பொதுத் திறைசேரியின் உயர்தரத் தமிழ்த் தேர்ச்சிப் பரீட்சையிற் சித்தி.

(ஆ) சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் (தமிழ்);

(இ) தமிழ்ப் பாஷையை ஒரு பாடமாகக் கொண்ட (ஆங்கில) சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரம்;

(ஈ) இலங்கைக் கல்விப் பொதுத் தராதர (சாதாரணதர)ப் பத்திரம். தமிழ்மொழிப் பாடத்திட்டம் "ஏ" அல்லது "பி".

9. **பரீட்சையின் நேரசூசி பின்வருமாறு :—**

| | |
|---|---|
| மு.ப. 9.00—மு.ப. 11. | ஆசுப்பத்திரி நிருவாகம், அலுவலக முறைமைகள் பற்றிய பிரமாணங்கள். |
| பி.ப. 1.00—பி.ப. 2.30 | கணக்குகள். |
| பி.ப. 2.45—பி.ப. 4.15 | சிங்களம்/தமிழ். |

நேர்முகப் பரீட்சைக்குத் தகுதிபெறும் எல்லாப் பரீட்சார்த்திகளுக்கும் அப் பரீட்சைக்குரிய தேதி, நேரம் இடம் ஆகியயவற்றைப் பரீட்சை ஆணையாளர் புறம்பாக அறிவிப்பார்.

10. அடையாள அட்டைகள்.—அபேட்சகர்கள் அவர்கள் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் தங்களது அடையாளத்தைப் பரீட்சை மண்டபத்தில் மேற்பார்வையாளருக்கு நிரூபித்தல் வேண்டும். இந்நோக்கத்திற்கென பின்வரும் சாதனங்களில் எவையேனும் ஏற்றுக்கொள்ளப்படும்.

(அ) தபால் அதிபர் தலைமை அதிபதியால் வழங்கப்பட்ட அடையாள அட்டை;

(ஆ) பரீட்சை ஆரம்பத் திகதிக்கு முன் மூன்று வருடங்களுக்குள் வழங்கப்பட்ட செல்லுபடியான கடவுச் சீட்டு;

(இ) ஒரு அரசாங்க திணைக்களத்தின் அதிகாரத்துடன் வழங்கப்பட்டதும் வைத்திருப்பவரின் நிழற்படத்தைக் கொண்டதும் பரீட்சை ஆரம்பத் திகதிக்கு முன் மூன்று வருடங்களுக்குள் வழங்கப்பட்டதுமான ஏதாவது சான்றிதழ், உத்தரவுச்சீட்டு அல்லது பத்திரம்;

(உ) கடவுச்சீட்டு அளவிலான நிழற்படம் (நிழற் படத்தின் மறுபக்கத்தில் அபேட்சகரின் கையொப்பமிடப்பட்டிருத்தல் வேண்டும். திணைக்களத் தலைவர் அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் அந்த நிழற்படமும் கையொப்பமும் அந்த அபேட்சகரினது என்று அத்தாட்சிப்படுத்துதல் வேண்டும். அத்தாட்சிப் படுத்துபவரின் பெயர், பதவிப் பெயர், திகதி, முகவரி ஆகியன அதில் குறிக்கப்படல் வேண்டும். இந்த நிழற்படத்தை மேற்பார்வையாளர் பெற்றுக்கொள்ளுவார்.)

ஜி. அமரசேன,
பிரதிப் பணிப்பாளர் (நிருவாகம்)
சுகாதார சேவைப் பணிப்பாளருக்காக.

சௌக்கியத் திணைக்களம்,
த. பெ. இலக்கம் 500,
கொழும்பு.
1973 செப்தெம்பர்.

அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்

மாதிரி விண்ணப்பப் படிவம்

**ஆசுபத்திரி எழுதுவினைஞர் சேவையின் II ஆம் வகுப்பின் (அ) பிரிவுக்கு நியமிப்பதற்காகிய பரீட்சை—நொவெம்பர் 1973**

1. வழமையான கையொப்பம் :————.

(அ) (i) முதலெழுத்துக்களுடன் உமது முதற்பெயர் :————.

(ii) முதலெழுத்துக்களால் குறிக்கப்பட்ட பெயர்கள் (பெரிய எழுத்துக்களில்) :————.

(ஆ) தற்போதைய நியமனம்:————.

(இ) உத்தியோக விலாசம்:————.

2. (i) பிறந்த திகதி:————.

(ii) பால்:————.

3. நீர் இலங்கையரா எனவும், சிங்களவரா, இலங்கைத் தமிழரா, பறங்கியரா, பிறரா எனவும் கூறுக :————.

4. (i) ஆசுப்பத்திரி எழுதுவினைஞர் சேவையின் பொது எழுதுவினைஞர் வகுப்பில் சேர்ந்த திகதி:————.

(ii) சேவையில் உறுதிப்படுத்தப்பட்ட திகதி:————.

(iii) (அ) அரசாங்க மொழிக்கொள்கை நோக்கத்திற்காக நீர் "முன்னர் சேர்ந்தவரா", "புதிதாகச் சேர்ந்தவரா"————

(ஆ) நீர் எந்த மொழி மூலத்தில் இந்தச் சேவைக்குச் சேர்க்கப்பட்டீர் ? :————.

5. இந்த அறிவித்தலின் 8 (3) ஆம் பந்தியின் கீழ் நீர் என்ன பாடம் எடுக்கின்றீர்—சிங்களம் அல்லது தமிழ்.

6. சிங்களத்திலிருந்து/தமிழிலிருந்து விலக்குப்பெற உரிமையுடையவராயின் இந்த வர்த்தமானியின் அறிவித்தலின் 8 ஆம் பந்தியின் (iii) ஆம் குறிப்பின் கீழா (i) ஆம் குறிப்பின் கீழா என்பதனைக் குறிப்பிடுக. (i) ஆம் குறிப்பின் கீழாயின் பின்வருவனவற்றைக் கூறுக:—

(அ) பரீட்சைப் பெயர் :————.

(ஆ) பரீட்சை ஆண்டும் மாதமும்:————.

(இ) சுட்டிலக்கம்:————.

(ஈ) சிங்களத்தில்/தமிழில் சித்தியெய்திய பாடங்கள்:————.

(உ) தேர்ச்சிப் பரீட்சையின் மொழி மூலம், தரம் அல்லது படி சிங்களம்/தமிழ்:————.

7. இப்பரீட்சையை முதல் முறை எடுக்கிறீரா என்பதைக் குறிப்பிடுக :————.

இப்பரீட்சையை முதல் முறையாக எடுக்காதுவிடின் 25/- ரூபா பெறுமதியான முத்திரைகளை ஒட்டினீரா ?

8. முத்திரைகளுக்காகிய கூடு. | ரூபா 25 |

குறிப்பு.—அபேட்சகர்கள் 25 ரூபா பெறுமதியுள்ள முத்திரைகளை ஒட்டி அவற்றின் மேல் தனது கையொப்பத்தையும் திகதியையும் இடுவதன் மூலம் பயனற்றதாக ஆக்குதல் வேண்டும். முத்திரைகள் ஒன்றுக்கு மேல் ஒன்றாக அமையும் வகையில் ஒட்டப்படக்கூடாது.

மேலே குறிக்கப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவையென்றும் சரியானவையென்றும் இங்கு என்னால் ஒட்டப்பட்டுள்ள முத்திரைகள் போலியல்லாதனவையும், முன் உபயோகிக்கப்படாதனவையென்றும் நான் உறுதி செய்கின்றேன். இப்பரீட்சைக்காகிய ஒழுங்கு விதிகளுக்கு இணங்கி நடக்க உடன்படுகின்றேன்.

————,
அபேட்சகரின் கையொப்பமும்,
திகதியும்.
(இதன்கீழ் உள்ள குறிப்பைப் பார்க்கவும்)

குறிப்பு.—அபேசகர், தனது திணைக்களத் தலைவரின் அல்லது திணைக்களத் தலைவர் சார்பில் கையொப்பமிட அன்னாரின் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரின் அல்லது அபேட்சகரின் பகுதித் தலைவரின் முன்னிலையில் கையொப்பமிடல் வேண்டும்.

**அத்தாட்சிப்படுத்தல்**

திரு/திருமதி/செல்வி:............ ............ ......... என்பவர் எனது அலுவலக உத்தியோகத்தர் எனவும் அவரை நான் நன்கு அறிவேன் எனவும், அவர் எனது முன்னிலையில் 1973 ஆம் ஆண்டு......... மாதம்............நாளில் கையொப்பமிட்டாரெனவும் நான் உறுதி செய்கின்றேன்.

அத்தாட்சிப்படுத்துபவரின் கையொப்பம்:————.

பெயர்:————.

பதவிப் பெயர்:————.

முகவரி:————.

**பன்முனைப்படுத்தப்பட்ட கூறுத்தலைவரின் சான்றிதழ்**

திரு/திருமதி/செல்வி :————,

ஆசுப்பத்திரி எழுதுவினைஞர் சேவையின் பொது எழுதுவினைஞர் II ஆம் வகுப்பின் (ஆ) பிரிவினுள்ள எழுதுவினைஞர் எனவும் 1973———ஆந் திகதிய இலங்கைக் குடியரசின் அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தலின் பிரகாரம் இப்பரீட்சைக்குத் தோற்றத் தகுதியுடையவரெனவும் நான் அத்தாட்சிப்படுத்துகின்றேன். அவரின் வேலையும் நடத்தையும் திருப்திகரமானவை.

(ii) 2,4,6,7 ஆகிய கூடுகளில் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் சரிபார்க்கப்பட்டு சரியெனக் காணப்பட்டன.

(iii) இந்த உத்தியோகத்தர் இந்தப் பரீட்சையை முதல் முறையாக எடுக்கிறார்/இந்த விண்ணப்பப் பத்திரம் 25 ரூபா பெறுமதியான முத்திரைகளைக் கொண்டுள்ளது.

(பொருத்தமற்றதை வெட்டிவிடுக).

———————,
பண்முறைப்படுத்தப்பட்ட கூறுத் தலைவரின் கையொப்பம்.

பதவிப் பெயர் :————.

திகதி:————.

### பரீட்சைப் பகுதி இலங்கை

### பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகள்

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ளவேண்டும். விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சாதிகாரியின் விரகின்படி கீழ்க்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர் :—

(i) முழுப் பரீட்சையிலிருந்தும் நிறுத்தி வைக்கப்படுவர் அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்தி வைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் ஒரு பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர்.

(ii) ஒரு பாடத்திற்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர்.

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றுதவாறு தடுத்து வைக்கப்படுவர்.

(iv) சீவியகாலம் வரை பரீட்சைக்குத் தோற்றுதவாறு தடுத்து வைக்கப்படுவர்.

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமற் தடுத்து வைக்கப்படுவர்.

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலீசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விஷயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்துவிடல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ, பரீட்சைக்குப் பின்னரோ, தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால், அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும் அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம், அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

### விதிகள்

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணுது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும்பொழுதும் வெளியேறும் பொழுதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்திற்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரதும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவி செய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்திற் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றப் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படமாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமை யுண்டானுல் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்கு செய்யப்பட்ட மேசையை விட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமுஞ் செய்யக் கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்கு செய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருத்தல் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்படமாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந் தாளையோ வேறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடையெழுதுந் தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறுக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினுத்தாள் கொடுக்கப்பட்ட அரைமணித்தியாலத்துக்குப் பின். பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்படமாட்டார். இந்த நேர எல்லை கழிந்த பின்னர்தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேகவும் அனுமதிக்கப்படுவர். செய்கைமுறை அல்லது வாய்மொழிப் பரீட்சையைப் பொறுத்த வரையில் தாமதித்து வந்த ஒரு பரீட்சார்த்தியை மேற்பார்வையாளர் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினுத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணுக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலும் சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமையவேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியனவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச் செல்லல் ஆகாது. ஒரு வினுவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறுக நடந்தால் அது ஏமாற்றுவதற்கான எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினுக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனே செய்கை வழியில்லாமலோ சரியான விடைகளிருந்தால் சித்திரத்தில் அலங்காரரூபச் சித்திரமும் கருத்துவெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினேடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள்மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களை விட வேறு தாள்களையோ வைத்திருக்கக்கூடாது. தேவைக்கு வேண்டியமாதிரி வர்ணப்பெட்டியையோ கணிதக் கருவிப் பெட்டியையோ விட கைப்பை, அழகுசெய் செப்பு, பார்சல் முதலியவற்றை, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக்கடதாசிக் கொப்பி, மடித்த புதினப் பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக்கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்குள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்துள்ளிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகமோ குறிப்புகளோ வைத்திருக்கக்கூடாது. மேற்பார்வையாளருக்குத் தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிடவேண்டும். இந்நிபந்தனைகளை மீறினுல் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தை விட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பங்களிலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனுல் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சார்த்தி மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும் மீண்டுவரும்பொழுதும் சோதிக்கப்படுவர்.

14. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவி செய்யவும் அப்

பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறெவரிடமிருந்தோ உதவி பெறவுங் கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின் கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்கு மேல் விடக்கூடாது.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மைபற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றஞ் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டுப் பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் ஒரு பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

**பரீட்சார்த்திகளுக்கு**

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி மேல்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும் :—

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்கக் குறைந்தபட்சம் 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதியைப்பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். அல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்துக்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப் பத்திரங்களை ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடின் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படக்கூடும். உண்மைபற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால்; அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்கவேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக்கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுபட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழி றப்பர்கள், நிறப்பென்சில்கள், வர்ணக் கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதிசெய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதும் தாளில் இருபக்கத்திலும் துப்புரவாகவும் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்படவேண்டும். அல்லது சில வெற்றுக் கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடது பக்க அடைப்பில், வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு பரீட்சகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமான கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளின் முறையான அமைப்பு முறையில் தருக. வரைப் படங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைப் படத்தை அல்லது கோட்டுரூபத்தை அல்லது சிறு படத்தைக் காட்டி எழுதப்படும் விடை விடைத்தாளின் மறு பக்கத்திலும் தொடரப்படுமானால், அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்படவேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிபிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்று சேர்த்து இடது பக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள், தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களை நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்கவேண்டும். இது செய்யத் தவறினால் உம்து விடைத்தாள் காணமற்போய் இப்பாடத்திற்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம்பற்றியும் சேவகனிடமோ பணியாளரிடமோ விடைத் தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத் தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

போகொட பிரேமரத்ன,
பரீட்சாதிகாரி.

பரீட்சைப் பகுதி,
மலே வீதி, கொழும்பு 2.

9-715—28.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 79.

---

**கமத்தொழிற்றிணைக்களம்**

கமத்தொழில் குறுகியகாலப் பயிற்சிநெறி—1973/74
பெரும்போக காலம்

1. கமத்தொழிற்றிணைக்களம் 1973/74 பெரும்போக காலத்தின் போது கமக்காரர்களுக்கான பின்வரும் பயிற்சிநெறிகளை நடாத்தும்.

அ. பொது விவசாயப் பயிற்சிநெறி.—(பயிர், கால்நடை உற்பத்தி) விவசாயத்தை மேற்கொள்ளத் தொடங்கும் கமக்காரர்களுக்கு—(3 மாதங்கள்) பெண்களுக்கு பொது விவசாயப் பயிற்சியுடன் வீட்டு முகாமைப் பயிற்சியும் (தையல், தையல் ஊசிவேலை, சமையல், உணவுப் பாதுகாப்பு) அளிக்கப்படும்.

ஆ. குறுகிய பயிற்சிநெறி.—(1 வாரத்திலிருந்து 4 வாரங்கள்) பின்வரும் விசேட பாடங்களில் இளம் விவசாயிகளுக்கும் முதிர்ந்த விவசாயிகளுக்கும் பயிற்சி அளிக்கப்படும்.

1. நெற்செய்கை.
2. காய்கறிச் செய்கை (கீழ்நாட்டு, மேல்நாட்டு மரக்கறி)
3. மிளகாய், வெங்காயம், பருப்புவகை (சோயா அவரை, பருப்பு, பாசிப்பயறு, உழுந்து ஆகியன) ஆகியவற்றை நீர்ப்பாய்ச்சலின் கீழ் செய்தல்.
4. சிமிக்கிப்பழ, அன்னாசிப்பழச் செய்கை.
5. கோழி வளர்ப்பு.
6. பாற்பண்ணைச் செய்கை.
7. தேனீ வளர்ப்பு.
8. நீர்ப்பாய்ச்சற் பம்புகள் தெளிப்பான்கள் மருந்து தூவுகருவிகள் ஆகியவற்றைப் பேணல் செப்பனிடல்.

2. இந்நெறிகள் அமைப்பில் சாதன முறையானவை. விவசாயத்தைத் தமது முழுநேர அல்லது இடைநேர முயற்சியாகக் கொண்ட இளம் அல்லது முதிர்ந்த விவசாயிகள் அல்லது மற்றவர்கள் கமத்தில் உதவி புரிபவர்கள், கமத்திறனைத் திருத்த விரும்புபவர்கள் அல்லது கமத்தில் ஈடுபட விரும்புபவர்கள் ஆகியோர்களுக்காகவே இப்பயிற்சி நெறிகள் தொடங்கப்பட உள்ளன. இப் பயிற்சி முடிவின்பின் அரசாங்கத்தால் தொழில் வசதி அளிக்கப்படமாட்டாது.

3. தெரிவின்போது இளம் விவசாயிகள் கழக உறுப்பினர்கள், பிரிவு அபிவிருத்தி சபையின் கமத்தொழில் திட்டங்களில் கூட்டுறவுக் கமங்களில் பங்கு கொள்வோர்கள் ஆகியோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

4. பாடத்தைப் பொறுத்து 1 வாரத்திலிருந்து 4 வாரம் வரை பயிற்சியின் காலம் வேறுபடும்.

5. கல்வித் தகைமை கேட்கப்படவில்லை.

6. 17 வயதிற்கு மேற்பட்ட இளைஞரும் வயது வந்தோர்களும் இப்பயிற்சியில் சேரலாம்.

7. இப்பயிற்சிநெறிகள் வாகொல்லை (கேகாலை), பிந்துனுவெவ (பதுளை), ஹொரணை (களுத்துறை), லபுதுவ (காலி), மாபலான (மாத்தறை), கரடியனாறு (மட்டக்களப்பு), மலவத்தை (அம்பாறை), மகாஇலுப்பல்லம (அனுராதபுரம்), கிளிநொச்சி (யாழ்ப்பாணம்) ஆகிய பயிற்சி நிலையங்களில் நடாத்தப்படும். பெண்களுக்கான பயிற்சி சிங்கள மொழியில் லபுதுவவில் மாத்திரம் நடைபெறும். முடிந்த அளவில் அண்மையிலுள்ள பயிற்சி நிலையத்திற்கு பயிற்சியாளர்கள் அனுப்பப்படுவர். ஆயின், பயிற்சியாளர்கள் வேறு ஏதாவது பயிற்சி நிலையத்திற்குச் செல்ல ஒதுக்கப்பட்டால் அதற்குச் செல்லத் தயாராக இருக்கவேண்டும்.

8. மேலே உள்ள பந்தி 7 ல் சொல்லப்பட்ட நிலையங்களில் இருப்பிட வசதி உண்டு. இப் பயிற்சியாளர்கள் வெளியில் தங்கி பயிற்சியைப் பெறுவதற்குத் தடையில்லை.

9. பயிற்சியின்போது அரசாங்கத்தால் எதுவித படிகளும் அளிக்கப்படமாட்டாது. தங்கி இருக்க வேண்டுபவர்களுக்கு இருப்பிட வசதியும் சமையல் அறை வசதியும் இலவசமாக அளிக்கப்படும். சமையலுக்குப் பயிற்சியாளர்கள் தங்களது வசதிகளைச் செய்து கொள்ள வேண்டும். பயிற்சி நிலையங்களில் இருக்கும்போது பயிற்சியாளர்கள் விதிகளுக்கும் பிரமாணங்களுக்கும் இணங்க நடந்து கொள்ள வேண்டும்.

10. பயிற்சிகள் சிங்களத்தில் அல்லது தமிழில் நடைபெறும்.

11. பயிற்சிகள் முடிந்தவுடனேயே சான்றிதழ்கள் வழங்கப்படமாட்டா. ஓராண்டிற்கு விரிவாக்க உத்தியோகத்தரின் வழிகாட்டலின் கீழ் கமத்தொழிலில் ஈடுபட்ட பின்னரே சான்றிதழ் வழங்கப்படும்.

இக் குறுகிய பயிற்சிகளைப் பெற விரும்புபவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழே காட்டப்பட்டவாறு அமைந்த விண்ணப்பங்கள், விண்ணப்பதாரி வசிக்கும் மாவட்டத்து மாவட்ட விவசாய விரிவாக்க உத்தியோகத்தருக்கு 29.10.73 ல் அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்பட வேண்டும். பயிற்சியின் ஆரம்ப தினம் மாவட்ட விரிவாக்க உத்தியோகத்தரால் அறிவிக்கப்படும்.

ஈ. அபயரட்ண,
கமத்தொழில் பணிப்பாளருக்காக.

கமத்தொழில் திணைக்களம்,
பேராதனை,
17.9.1973.

## கமத்தொழிலில் குறுகியகாலப் பயிற்சிநெறிகள்

### விண்ணப்பப் பத்திரம்

1. பயிற்சி பெறவிரும்பும் பயிற்சியின் விதத்தைக் குறிப்பிடுக (அதாவது பிரிவு அ அல்லது ஆ) :————.

2. (ஆ தெரியப்படின்) எப்பாடத்தில் பயிற்சி பெற விரும்புகிறீர்?:————.

3. விவசாயத்தில் என்ன அனுபவம் உமக்கு உண்டு.:————.

4. நீங்கள் இளம் விவசாயிகள் கழகம்/பிரிவு அபிவிருத்திச் சபையின் கமத்தொழில் திட்டம்/அல்லது கூட்டுறவுப் பண்ணை உறுப்பினரா ? :————.
அவ்வாறாயின் விபரங்கள் தரவும் :————.

5. பயிற்சியின் பின் எங்கு விவசாயம் செய்ய எண்ணியுள்ளீர்: ————.

6. உங்களுக்கு விவசாய உதவி வழங்க உங்களது தகப்பன்/பாதுகாவலர் விருப்பமுள்ளவர்களாக இருக்கின்றார்களா ?:————.

7. பெயரும் முகவரியும்:————.

8. வயது :————.

————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி:————.

9-769—28.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 79.

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானிகளுக் குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

[illegible] குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.

முக்கிய கவனிப்பு.—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரிடம் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

அட்டவணை 1973

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| ஒற்றோபர் | .. | 5.10.73 | வெள்ளி | .. | 25. 9.73 | செவ்வாய் | .. | ந.ப. 12.00 |
| | | 12.10.73 | வெள்ளி | .. | 3.10.72 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 19.10.73 | வெள்ளி | .. | 10.10.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 26.10.73 | வெள்ளி | .. | 17.10.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| நவெம்பர் | .. | 2.11.73 | வெள்ளி | .. | 24.10.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 9.11.73 | வெள்ளி | .. | 31.10.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 16.11.73 | வெள்ளி | .. | 7.11.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 23.11.73 | வெள்ளி | .. | 14.11.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 30.11.73 | வெள்ளி | .. | 21.11.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| திசெம்பர் | .. | 7.12.73 | வெள்ளி | .. | 28.11.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 14.12.73 | வெள்ளி | .. | 5.12.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 21.12.73 | வெள்ளி | .. | 12.12.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 28.12.73 | வெள்ளி | .. | 19.12.73 | புதன் | .. | ந.ப. 12.00 |

எல். டபிள்யு. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆடு ஓகத்து மீ 18 ந் உ.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.